Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 11    (23.02.94)    புதன்கிழமை    நாதம் 15

## குருதியிலுள்ள நஞ்சைப் பிரிக்க புதிய உபகரணம் கண்டுபிடிப்பு

இரத்தத்தில் நஞ்சூட்டப்பட்ட நோயாளிகளின் இரத்தத்தில் இருந்து நஞ்சை வடித்தெடுப்பதற்கான முறையொன்றை ஜப்பானிய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த மருத்துவ உபகரணம் மருத்துவ விஞ்ஞானத்திற்கான சேகா பல்கலைக் கழகத்தினாலும் ஒரு பிரதான புடவை உற்பத்தியாளரினாலும் கூட்டாக தயாரிக்கப்பட்டுள்ளது. குருதிச் சுற்றோட்டத்தில் சேரும் பக்ரீறியாவினால் இரத்தம் நஞ்சாகிறது. பக்ரீறியா பரப்பும் நச்சுப் பதார்த்தம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது. இந்நஞ்சை பிரித்தெடுக்கவே புதிய கருவி தயாரிக்கப்பட்டுள்ளது.

## நாகதேவன்துறை கடற்படைத் தளம் மீண்டும் அமைக்க அரசு முயலும்

### சண்டே ஐலன்ட் தகவல்

(கொழும்பு)

வடபகுதியில் விரைவில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளின் போது யாழ். கடல் நீரேரிப் பகுதியில் சிறிலங்கா கடற்படை மீண்டும் ஆதிக்கம் பெறும் வகையில் நாகதேவன் துறையில் பெரும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என சண்டே ஐலன்ட் பத்திரிகை கூறுகிறது.

நாகதேவன்துறை கடற்படை முகாம் அழிக்கப்பட்ட பின்பு இப்பகுதியில் புலிகள் சுலபமாக நடமாடுவதால் இதைத் தடுக்கும் வகையில் நாகதேவன் துறையில் மீண்டும் கடற்படை முகாம் அமைக்கப்படவேண்டும் எனவும் இதற்காக பாரிய நடவடிக்கை இப்பகுதியில் அநேகமாக நடைபெறலாம் எனவும் அப்பத்திரிகை கூறுகிறது.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இஸ்ரேலின் உதவியுடன் அதிவேக படகுகளை கட்ட முயற்சி

### டொக்யாட் நிறுவன படகுகளைவிட சிறந்தவையாம்

கடற்படைக்குத் தேவையான விரைவு தாக்குதல் படகுகளை குறைந்த செலவில் தயாரித்து வழங்க கொழும்பு டொக்யாட் நிறுவனம் முன்வந்துள்ள போதிலும் கூடிய செலவில் மூன்று படகுகளைக் கட்ட இஸ்ரேலின் உதவியை கடற்படை நாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் 24 மீற்றர் நீள விரைவு தாக்குதல் படகுகளை ஒவ்வொன்றும் 3.95 மில்லியன் அமெரிக்க டொலர் செலவுக்கு கட்டித்தர முன்வந்துள்ள அதே வேளை கொழும்பு டொக்யாட் நிறுவனம் படகு ஒவ்வொன்றும் 3 65 மில்லியன் அமெரிக்க டொலர்களில் கட்டித்தர முன்வந்துள்ளது, இப்படகுகளை கட்ட தமக்கு அரசு

(6ஆம் பக்கம் பார்க்க)

## தபால் பொதிகள் இன்று இறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பலில் ஏற்றி வரப்பட்ட தபால்பொதிகள் இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டது.

இப் பொதிகள் இன்று தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டு நாளை விநியோகம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தரைவழியான விநியோகமே ராணுவத்தின் வெற்றியாகும்!

## மேலும் ஆறு சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளியன்று முல்லைத்தீவுப் பகுதியில் பூனைத்தொடுவாய்க் கடற்பகுதியில் கடற்படையினரால் கொல்லப்பட்ட மீனவர்களில் மேலும் ஆறு பேரின் சடலங்கள் கரை ஒதுங்கின. நேற்று முன்தினம் பூனைத்தொடுவாய்க் கரையில் இவை ஒதுங்கின.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயந்த கொத்தலாவல பூநகரிக்கு மாற்றம்

(கொழும்பு)

தாக கூறப்படும் திருட்டுக்

## ஆகாயத்தில் பெறுவதல்ல என்கிறார் புதிய விமானப்படைத் தளபதி

[கொழும்பு]

## லண்டன் ஹரிசியம் நகர் மேயர் யாழ். வருகை

லண்டன் ஹரியம் நகரின் விட்டு மீண்டும் கொழும்புக்கு

(கொழும்பு)

அமெரிக்காவில் திருட்டுக் குற்றம் தொடர்பாக திருப்பி அனுப்பப்பட்ட லெப். கேணல் ஜெயந்த கொத்தலாவல பூநகரி பகுதி பட்டாலியன் தளபதியாக நியமிக்கப்பட்டு பூநகரி பகுதிக்கு அனுப்பப்படவுள்ளார். லெப். கேணல் கொத்தலாவல இவ்வாரம் பூநகரி வந்து சேர்வார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காவில் தான் மேற்கொண்டதாக கூறப்படும் திருட்டுக் குற்றம் தொடர்பான தனது விளக்கங்களை அமெரிக்காவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட லெப். கேணல் கொத்தலாவல இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவிடம் விபரித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவரது குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய இதுவரை இராணுவ விசாரணை மன்றம் எதுவும்

(6-ம் பக்கம் பார்க்க)

## உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசுடன் உலக வங்கிக்கு ஏற்பட்ட முரண்பாடுகளால் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் ஜூன் 8ஆம்திகதி நடைபெறுவதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எயார்பஸ் விமானங்கள் கொள்வனவு தொடர்பாக எழுந்தசர்ச்சையே ஒத்திவைப்பிற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. எனினும் இது குறித்து கருத்து தெரிவித்த சிறி

(6-ம் பக்கம் பார்க்க)

**வடக்கு-கிழக்கு பிரச்சினை**

## யாருடன் பேசுவதென்று ரணிலுக்குத் தெரியாதாம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தை தொடர்பாக இன்னும் கதவுகள் மூடப்படவில்லை என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதையே தான் விரும்புவதாகவும் இது தொடர்பாக யாருடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதே தெரியாமல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பத்து வருடமாக நடைபெறும் யுத்தத்தினால் முப்பது

(6ஆம் பக்கம் பார்க்க)

[கொழும்பு]

**"போரில் வெற்றி என்பது தரையில் பெறப்பட வேண்டும் ஆகாயத்தில் அல்ல. விமானப்படை ஆகாயமார்க்கமாகவே விநியோகம் செய்கின்றது. விநியோகம் என்பது தரைமார்க்கமாகவே இருக்க வேண்டும்" என சிறிலங்காவின் புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க சண்டே ஐலன்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது; "வடக்கில் இராணுவம் இருக்கும் இடங்களைப் பாருங்கள். அப்பகுதிகளுக்கு தரைமார்க்கமாக செல்லமுடியாது. அவற்றிற்கான விநியோகம் முழுமையாக ஆகாய வழியாலும் கடல்வழியாலுமே நடக்கின்றது. இப்படியான விநியோகத்தை நாம் பல வருடங்களாக மேற்கொள்கின்றோம். இது எம்மால் முடியும். ஆனால் இதன் மூலம் நாம் போரில் வெற்றிபெற முடியாது. விநியோகங்களுக்காக தரைமார்க்கங்கள் திறக்கப்பட வேண்டும் என்றார்.

புதிய தளபதிகள் பொறுப்பேற்றதும் தமது படையில் பெரும் மாற்றங்களைச் செய்வார்களே, அப்படியான மாற்றம் ஏதும் செய்யவுள்ளீர்களா எனக் கேட்கப்பட்டபோது, பெரும் மாற்றங்கள் ஏதும் செய்வதற்கில்லை. நான் முன்னர் நடவடிக்கைகளுக்கான இயக்குனராகவும், அதிகாரிகள் நிலை தலைவராகவும் இருந்தபோது தேவையான மாற்றங்களைச் செய்துள்ளேன். எனினும் சிறு மாற்றங்கள் செய்யப்படலாம் என விமானப்படைத் தளபதி கூறி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கப்பற் கட்டணத்தால் விலை உயர்வு கண்டித்து மறியல் போராட்டம்

(நமது நிருபர்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டையும், கப்பல்கட்டணத்தால் ஏற்படும் விலை உயர்வையும் கண்டித்து மாபெரும் மறியல் போராட்டமும், ஆர்ப்பாட்டப் பேரணியும் எதிர்வரும் முதலாம் திகதி நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், பேக்கரி உரிமையாளர் சங்கம், மதகுருமார் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டும் இன்னும் தமிழர்களை அழிக்கவும் முடியவில்லை, அடிபணிய வைக்கவும் முடியவில்லை என எண்ணிக்கொண்டு இன்று மக்களைப் பட்டினிச் சாவின் கோரப்பிடிக்குள் சிக்கவைத்து சாகடிக்க முனையும் நோக்குடன் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பாமல் தட்டிக்கழிப்பதுடன், தமிழ் மக்களைச் சுரண்டி கொழுத்த லாபம் சம்பாதிக்கும் நோக்குடன் கப்பல் கட்டணமும் சேர்த்து அறவிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நீதி நியாயமற்ற - மனித நேயமற்ற நடவடிக்கைகளைக் கண்டித்து எமது மக்களின் ஏகோபித்த எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாக யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மார்ச் 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியும், மறியல் போராட்டமும் நடாத்த ஒழுங்கு செய்து வருகின்றது.

இது சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் ஒன்று நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் மாவட்டத்திலுள்ள அனைத்து வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பாக சனசமூக நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், ஊழியர் தொழிற் சங்கங்கள், வங்கி ஊழியர்

(6ஆம் பக்கம் பார்க்க)

லண்டன் லூசியம் நகரின் மேயர் ஒருவர் 'ஹெந்தல' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

லண்டன் பி.பி.ஸி. தொலைக்காட்சி ஆலோசகரும், லூசியம் நகரின் மேயருமான சின்னமணி சுப்பிரமணியம் என்பவரே நேற்று வந்தவராவார். இவர் இரண்டு தினங்கள் இங்கு தங்கியிருந்துவிட்டு மீண்டும் கொழும்புக்கு புறப்படுவார்.

வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த மே மாதம் மேயராக அந்நாட்டு மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர். வெளிநாடுகளில் உள்ள மேயர்களில் இவர் ஒருவரே தமிழ்மேயரும், இலங்கையை சேர்ந்தவருமாவார். (யோ)

## கட்டையடம்பன் பகுதியில் 'புக்காரா' தாக்குதல்

(மன்னார்)

கட்டையடம்பன் கிராமத்திலுள்ள மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று முன்தினம் பகல் 2-00 மணியளவில் இரண்டு புக்காரா விமானங்கள் குண்டுவீச்சு தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலின்போது ஆறு குண்டுகள் வீசப்பட்டன. மேலும் இரண்டு உலங்குவானூர்திகள் அப்பகுதியில் தாக்குதலை நடாத்தின. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## தேர்தல் பிரசாரத்திற்கு அரசாங்க ஹெலி

### ஐ. தே. க பயன்படுத்துகிறது

(கொழும்பு)

கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் பிரசாரத்திற்கும் தென் மாகாணசபை தேர்தல் பிரசாரத்திற்கும் ஐ. தே. க பிரமுகர்கள் விமானப்படை உலங்கு வானூர்திகளை அதற்கான கட்டணம் ஏதும் செலுத்தாது பயன்படுத்துகின்றனர். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடும் வார்த்தைப்பிரயோகங்கள் கொண்ட இக்கடிதத்தில் இந்த உலங்குவானூர்திகள் நாட்டுக்கு சொந்தமானவை தனிப்பட்ட கட்சிக்கல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முல்லையில் காவலரண் மீது தாக்கு சிப்பாய் பலி, நால்வர் காயம்

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கும் அரியகுண்டான் இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள காவலரண்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

நேற்று முன்தினம் மாலை நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் ஓர் இராணுவச் சிப்பாய் பலியானார், மேலும் நால்வர் காயமடைந்தனர் என சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் கூறின. இக்காவலரண் கூரை மீது இருந்த சிப்பாய் ஒருவரே கொல்லப்பட்டவரென அவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

இதேவேளை இத்தாக்குதலில் பல இராணுவ உபகரணங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில் இழப்பு எதுவும் இல்லை.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஃ | ரி-81 ரக துப்பாக்கி | 01 |
| ஃ | ரி-81 மகஸின் | 05 |
| ஃ | ரி-56 மகஸின் | 03 |
| ஃ | ஏ. கே. கோல்சர் | 03 |
| ஃ | ஐ. எம். ரவைகள் | 184 |
| ஃ | மழை அங்கி | 03 |

## ஒருநாள் ராணுவ நடவடிக்கைகள் முடிவிற்கு வந்தே ஆகவேண்டும்

### லண்டன் லூசியம் மேயர்

(வடமராட்சி)

சிறிலங்காவில் தமிழர் வாழும் பகுதிகளில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் ஒருநாள் முடிவுக்கு வந்தாக வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த லண்டன் லூசியம் நகரின் மேயர் சின்னமணி பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து எமது வடமராட்சி செய்தியாளருக்கு முன் கண்டவாறு தெரிவித்தார்.

லண்டன் நகரில் தமிழர்கள் நலன் கவனிக்கப்படுகிறதா என்று எமது செய்தியாளர் மேயரைக் கேட்டபோது; முன்னர்போல் அல்ல. அங்கே சில அரசியல் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. இச்சட்டங்களுக்கு அமைய அந்த நாட்டுக்கு புதியவர்கள் வருகை குறைவடைந்து வருகிறது.

லண்டன் நகரில் இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக ஒரு இலட்சத்துக்குமேல் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு தொழில் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. அநேகமாக சிறிய தொழில்கள்தான்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சீலிங் போடெக், கனர் தோளைக்காலிப் பெட்டிகள், சுதற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருள்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புமின்னம் இல.81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-8638)

### சைனீஸ் உணவு சேவை

மதிய உணவு - மீன் - இறைச்சி, முட்டை, மரக்கறி, மாலை உணவு - புரியாணி, பிறைட்றைஸ், அடிக்கி வகை பாசல் ஓடர்களுக்கும் நாடவும், கருணா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். வேம்படி பாடசாலை முன்பாக. (7560)

### தேவை

போட்டோப் பிரதி இயந்திரம் தேவை. நாடவேண்டிய இடம் யாழ். நாவப்பட்டணர்த்தக சங்கம் 81 மேல்மாடி நவீன சந்தை யாழ்ப்பாணம். (இ-8693)

### இலவச வகுப்புகள்

(தெல்லிப்பழை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினது யுத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய மண்டபத்தில் இயங்கும் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இலவச கல்வி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

கோப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மேற்படி கல்வி வளர்ச்சிக் கழகத்தில் வேலைகளில் ஆண்டு 8 முதல் ஆண்டு 11 வரை நடைபெறு வகுப்பு கல்வி பொதுத் தராதரப் பத்திரத்திற்கு அமைவாக இலவசமாக கல்வி கற்பிக்கப்படுவதோடு, இரவுவேலைகளில் பெற்றோமாக்ஸ் வசதி வெளிச்ச வசதியுடன் மாலை (சுய கல்வி) வகுப்புகளும் நடை...

## கோப்பாய் உவர் நிலத்தில் மண், நீர் ஆய்வுகள்

கோப்பாய் வெளியில் உவர் நில பிரதேசத்தில் பரீட்சார்த்த நெற்செய்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏனைய நிறுவனங்களுடனும், விவசாயிகளுடனும் இணைந்து ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது யாவரும் அறிந்ததே.

இந்த பிரதேசத்தில் மண், நீர் பற்றிய ஆய்வுகள் நடைபெறுவது இந்த பிரதேசத்தை முழுமையாக பயன்பாட்டுக்கு கொண்டுவர அவசியமாகும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாய ஆராய்ச்சி நிலையமும் இணைந்து தொடராக இவ் ஆய்வுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இரண்டு கிழமைக்கு ஒரு தடவை, மண் மாதிரிகளும் மண் அடியில் உள்ள நீர் மாதிரிகளும் எடுத்து ஆய்வு செய்யப்படுகின்றது.

சுமார் இருபது வருடங்களில் நெல் வேளாண்மை செய்யப்படாமை இப்பிரதேசம் உவராக மாறியதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

வயல் சொந்தக்காரர் அதிக காலமாக இந் நிலங்களை நன்கு உழுது பராமரிக்காமல் விட்டதாலும், நிலங்கள் பழுதடைந்து இருக்கலாம்.

மேலும் கடல்நீர் உட்புகுந்ததனாலும் மேட்டு நிலங்களில் தொடர்ந்து தொட்டமாக காணப்படும் உப்புக்கள் கரைந்து சென்று பள்ளமான இடங்களை அடைந்தமையாலும் கோடை காலங்களில் மண்ணின் மேற்பரப்பிலிருந்து நீர் ஆவியாகும் போது கீழ்உள்ள உப்புக்கள் மண்ணின் மேற்பரப்பினை அடைவதனாலும், உவர்த்தன்மை ஏற்பட்டிருக்கலாம்.

இவ்விதமான நிலங்களில் பயிர் செய்வதற்கு ஏற்ற நன்நீரினை பாத்திகளில் தேக்கி வைத்து அம்மண்ணில் உள்ள உப்புகளை கீழே கழுவிச் செல்லக்கூடியதாக பாத்திகளை அமைத்தல் வேண்டும்.

மேலும் கூடுதலான சேதன பசளைகளை புதைத்து நிலத்தை பண்படுத்த வேண்டும்.

அத்துடன் உவரை சகிக்க கூடிய பயிர் வகைகளை செய்யவேண்டும். உதாரணமாக நெல்லில் பொக்காளி உவர் கறுப்பன் போன்ற நெல்லினங்கள் எமது பிரதேசத்தில் உவர் நிலங்களில் செழித்து வளர்கின்றன புதிய (AT 402) போன்ற நெல்லினங்கள் இல உவரை சகித்து வளரக் கூடியன.

இப்பிரதேச மண், நீர் பற்றிய ஆய்வுகள் தொடர் நடவடிக்கையாக செய்யப்படுகின்றது.

பரீட்சார்த்த நெற் செய்கை வெற்றியளித்துள்ளமையினால் விளைச்சல் அதிகரிக்கவும், முழுப் பிரதேசத்தையும் பயிர் செய்கைக்கு உட்படுத்தவும், வேண்டிய ஆய்வுகளை விவசாய ஆராய்ச்சி நிலையம் துரித கதியில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையினால் எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்.

## குண்டர்களும் குடிகாரரும் கூட்டம் குழப்புகின்றனர்

### செல்லச்சாமி குற்றச்சாட்டு

(கொழும்பு)

குண்டர்களும், குடிகாரர்களும் தமது கூட்டங்களைக் குழப்பி வருவதாக அமைச்சர் செல்லச்சாமி குற்றம்சாட்டியுள்ளார்.

தோட்டப்புறப் பகுதி மக்களுக்கு தமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் தான் கலந்துகொண்டு உரையாற்றுவதை தொடங்கினால் ஏவிடப்பட்ட குண்டர்களும், குடிகாரர்களும் குழப்பிவருவதாக அவர் தெரிவித்துள்ளார். நுவரெலியாப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே அமைச்சர் செல்லச்சாமி இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட - கிழக்கு போர் மனிதாபிமானமற்றது

### ஆயர் சங்கம் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு யுத்தம் மனிதாபிமானமற்ற ஒன்றாகும் என்று கத்தோலிக்க ஆயர் சங்கம் தெரிவித்துள்ளது. கத்தோலிக்க ஆயர் சங்கம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: வடக்கு, கிழக்கு பகுதியில் இடம் பெற்றுவரும் யுத்தம் அநியாயமானது. கடந்த பத்து வருடங்களில் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இந்த யுத்தத்தால் கொல்லப்பட்டுள்ளனர்: பத்துலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த அறிக்கை வத்திக்கான் வானொலியிலும் விமர்சிக்கப் பட்டுள்ளது.

## 80சதவீதமான குழந்தைகள் நோயினால் பாதிப்பு

### சோசியல் ஜஸ்டிஸ் சஞ்சிகை தகவல்

வட பகுதியில் பிறக்கும் குழந்தைகளில் அநேகமானோர் நிறை குறைவாகவே இருப்பதாகவும், இப் பகுதியில் வாழ்வோரில் ஒன்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் ''சோசியல் ஜஸ்டிஸ்'' என்னும் ஆங்கில சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளின் முகாம்கள் சுகாதார சீர்கேடு, சூழல் மாசடைந்துள்ளதுடன் எரிபொருள்விலை அதிகரிப்பும், வேலை இல்லாத் திண்டாட்டம் என்பனவற்றால் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ். மாநகரசபையின் விடுமுறைகால சந்தை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை யாழ் நகரின் பொது வசதிக்கூடத்திற்கு பின்புறமாக விடுமுறை காலச் சந்தை ஒன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இச் சந்தை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் ...கும் என தெரிவிக்கப்பட்டது.

இச் சந்தையில் சுமார் 40இற்குக் குறையாத கடைகள் இயங்கவுள்ளன. இங்கு பொதி செய்யப்படாத உணவுப் பொருள்கள் தவிர்ந்த புடைவை, அழகுசாதனப் பொருள்கள் போன்ற பொருள்கள் விற்பனை...


### யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மண்ணெண்ணை விநியோகம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர் அவையால் 1994ஆம் கழக ஆண்டு மாணவர்களுக்கு மண்ணெண்ணை விநியோகிக்கப்படும்.

வியாழன், வெள்ளி (24-02-94, 25-02-94)
காலை 10—1 மணிவரை



### கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்

நடாத்தும், புதுவருட
மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

∴ விலகல் முறையிலான 7 பேர் கொண்ட 8 ஓவர்கள்
∴ விண்ணப்பப் படிவங்களை 4 - 6 மணிவரை நிலையத்தில் பெறலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 01-03-1994

கொக்குவில் மேற்கு,
ச. ச. நிலையம்,
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் -நிர்வாகம்

(7591)



### 1-ம் வருட நினைவு



மலர்வு
19-12-1945

உதிர்வு
6-3-1993

வைத்திலிங்கம் குலநாயகம்
(மண்டைதீவு)

திதி:- 23-2-94

ஆருயிர் தெய்வமே எங்கள் அப்பாவே
விண்ணகமே சென்று விட்டீர் விழிகள் பல தேடுதையா
பேச்சிழந்த பாலகரின் வேதனையைப் பாருமையா
வாழ்க்கையையே பறித்தனரே வேதனையைத்தந்தனரே
சோதனையைத் தாங்கிடாது சோகமதை நெஞ்சிலேற்று
நஞ்சருந்த எண்ணியதேன் தவிக்குதையா எம்மனங்கள்
சிறகிழந்த பறவைகளாய் துடிக்குதையா நின்சேய்கள்

நின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

1- வது மில் ஒழுங்கை,
இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (7587)

நாகின் வாசிகு வெளிச்ச சதியுடன் கிடைக்க (கம கன்னி) வகுப்புகளும் நடை பெறுகின்றன. இக்கல்விச் சேவையினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பெரும் பயனடைந்து வருகின்றனர். (41)

## கொழும்பில் கொள்ளை

கடந்த 18-ம் திகதி அம் பாறையைச் சேர்ந்த ஒருவரி டம் கொழும்புக்கோட்டைப் பகுதியில் 5600/-பணத்தினை இனம் தெரியாதவர்கள் பறித் துள்ளனர் எனவும், வெள்ள வத்தைப்பகுதியில் ஒரு வீட் டில் தமிழ்ப்பெண்ணிடம் இரு ந்து இரண்டு லட்சம் ரூபா இனம் தெரியாதவர்களால் கொள்ளை அடிக்கப்பட்டுள் ளதாகவும் அங்கிருந்து வந்த வர்கள் கூறியுள்ளனர். (86)

## சப்பறத்திருவிழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆதிக் கலம் அருள் மிகு ஸ்ரீ சந்திர சேகரவிநாயகர் ஆலய வரு டாந்த மஹோற்சவ சப் பறத் திருவிழா இன்று 23 ஆம் திகதி புதன்கிழமை மா லை 5-00 மணிக்கு வசந்த மண்டபப்பூசையை அடுத்து நடைபெறும். (24)

## நிலக்காணி விநியோகம்

நிலமற்ற விவசாயிகளை யும் பயிர்ச் செய்கையில் ஈடு படுத்தும் நோக்குடன் கிளி நொச்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நி றுவனத்தின் கிராமிய அபிவிருத் திக்குழுப் பகுதியால் தரிசுக் காணிகள் வழங்கப்பட்டு வரு கின்றன.

இதனடிப்படையில் அண் மையில் கேப்பாப்புலவு கருக்கு மாந்தரன் நகர், திருமுறி கண்டி செல்வபுரம் ஆகிய இடங்களிலே நிலம் விநியோ கிக்கப்பட்டுள்ளது.

இந்த காணி விநியோகத் தினால் பயனாளிகள் தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த் திக் கொள்ள வாய்ப்பேற் பட்டுள்ளதோடு, செய்கைக் குட்படுத்தப்படாதிருந்த நிலப்பரப்புகள் பயிர்ச் செய் கைக்கு உட்படுத்தப்படுவத னால் எமது வளங்களின் பயன்பாடு அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இதுவரை சுமார் 130 ஏக் கர் தரிசுநிலம் பகிர்ந்து வழங் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

---

மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்:

வியாழன், வெள்ளி (24-02-94, 25-02-94)
காலை 10—1 மணிவரை
சனி, ஞாயிறு (26, 27-2-94)
மாலை 1—4 மணிவரை

(7529) -மாணவர் அவை

---

## நோயாளர் நலன்புரிச் சங்கம்

### யாழ். போதனா மருத்துவ மனை

## அறிவித்தல்

நோயாளர் பராமரிப்பாளர்களாகப் பணிபுரிய விரும்பும் எந்த வயதினைச் சேர்ந்த இரு பாலாரும் தத்தமது தகைமைகளுடன் குடும்ப விபரங்களையும் குறிப்பிட்டு நோயாளர் நலன்புரிச்சங்கம், இல 572, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 01-03-94 க்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகப்பொறுப்பாளர்

(7588) நன்றி

---

## வேலை வாய்ப்பு

### உள்ளகக் கணக்குப் பரிசோதகர்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

தகைமைகள்:-

1. க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (DIPLOMA IN ACCOUNTANCY) சான்றிதழ் அல்லது சி.ஐ.எம்.ஏ (CIMA) பகுதி 1--3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
(1 லும் 2 லும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல்ய தனியார் / அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.
3. அரசாங்க / தனியார் சேவையில் இருந்து இளைப் பாறியவர்கள் ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் கணக்குப் பகுதிகளில் வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 25-02-1994, 26-02-1994 ஆகிய தினங்களில் காலை 10.00 மணிக்கு தங்கள் விண்ணப்பத்துடனும் சான்றி தழ்களுடனும் காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் 80இலக்க இல்லத்திற்கு வரவும்.

இல. 80
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில். (இ-8692)

---

மாணிப்பதற்கு தீர்மானித் துள்ளது.

இச் சந்தை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் இயங்

## விளையாட்டு நிகழ்வு

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களை கௌரவிக்கும் முகமாக யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையால் ஒரு கராத்தே கண்காட்சி நாளை வியா ழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கைலாசபதி கலை யரங்கில் நடாத்தப்படவுள் ளது.

## தியாகசிலம் புனரமைப்பு

மானிப்பாயில் இயங்கிவரும் தியாக சீலம் எனும் சிறுவர் பூங்காவில் சென்ற வருட இறுதிப்பகுதியில் பெய்த கடும் மழையாலும், புயலாலும் பாரிய மரம் ஒன்று சாய்ந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட சேதத்தை புனரமைக்கும் பணி யில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உடுக்கு டுமான பகுதியின் தேசநிர் மாணிகள் ஈடுபட்டு வருகின் றனர்.

## பாடசாலைகளில் திடீர் பரிசோதனை

(பருத்தித்துறை)

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் (மந்திகை) பாடசாலைக்கு யாழ். வடக் குக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமை யிலான திடீர்ப் பரிசோத னைக்குழு விஜயம் செய்து பரிசோதனையை மேற் கொண்டது. இப் பாடசாலையின் சகல நடவ டிக்கைகளையும் ஆராய்ந்த திடீர் பரிசோதனைக் குழுவி னர் பாடசாலையின் பௌதிகத் தேவைகளை நிறைவேற்ற தகுந்த நடவ டிக்கைகள் உடன் மேற்கொள் ளப்படும் என உறுதியளித் துள்ளனர். புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலை பல தடவைகள் விமா னக் குண்டு வீச்சுக்களுக்கு இலக்கானதும் ஒப்பறேசன் லிபறேசன் காலத்தில் சிறி லங்கா இராணுவத்தினரின் முக்கிய முகாமாகவும் இருந்த இப்பாடசாலை பலத்த பாதிப்புகளுக்குள்ளாகி இருந் ததும் குறிப்பிடத்தக்கது. (25)

---

வுப் பொருள்கள் தவிர்ந்த புடைவை, அழகுசாதனப் பொருள்கள் போன்ற பொருள்கள் விற்பனை செய்ய அனுமதிக்கப்படவுள் ளன.

இதற்கான முயற்சிகள் யாழ். மாநகரசபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. மிக விரைவில் இச் சந்தை ஆரம்பிக்கப்படவுள்ள தாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## சீனி இறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது இக் கப்பலில் வந்த சீனியை இறக் கும் வேலை துரிதமாக நடை பெற்று வருகின்றது.

இறக்கப்படும் சீனி பங்கீட் டட்டை ஒன்றுக்கு இரண்டு கிலோ வீதம் உடனடியாக விநியோகிக்கப்படுமென முன் னர் செய்தி வெளிவந்தது தெரிந்ததே. (வி)

## பேச்சுப் போட்டி

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிசன், திருநெல்வேலி ஸ்ரீ ராமகிருஷ்ணாலயம்மூலமாக யாழ்ப்பாணம் கல்வித்திணை க்களத்துடன் இணைந்து நடாத்தும்பாடசாலை மாண வர்களுக்கிடையிலான மாவ ட்ட நிலைப் பேச்சுப் போட்டி வரும்வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வடக்கு வல யத்தைச் சேர்ந்த எட்டுக் கோட்டங்களிலும், யாழ்ப் பாணம் தெற்கு வலயத்தைச் சேர்ந்த ஐந்துகோட்டங்களி லும் முதலாவது இடத்தைப் பெற்ற அனைத்து மாணவ மாணவிகளும் இதிலே கலந்து கொள்கிறார்கள். இவ்வா ண்டு மே மாதத்தில் நடை பெறவுள்ள விழாவின் போது சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. போட் டியாளர்களுக்கான அறிவிப்பு அவ்வக் கோட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி த்திணைக்கள செய்திக் குறிப் பொன்று கூறுகிறது.

---

1- வது மில் ஒழுங்கை,
இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (7587)

---

## நினைவு கூருகின்றோம்..

## 1994. 02. 23

1985 ஆம் ஆண்டு இத்தினத்தில் யாழ் - நல்லூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வெள்ளை** (பேனாட் எட்வேட் ஸிரக் - இருதயபுரம் - மட்டு)

மன்னார் - முழங்காவில், நாயாற்றுவெளிப் பகுதி யிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**விஜி** (சூசைப்பிள்ளை றேமன் றெக்கினாஸ் - தேனுடையான், அடம்பன் - மன்னார்)

1988-ம் ஆண்டு மணலாறு - புதுக்குடியிருப்பு பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச் சாவெய்திய,

**குமரன்** (பிரகாஷ் அன்பரசன் - அலம்பில் மணலாறு)

1989-ம் ஆண்டு மட்டு - விசாரமலைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**தயா** (தம்பிராசா தயாபரன்- கோயில்போரதீவு - மட்டு)

**பீற்றர்** (குமாரலிங்கம் நடராசா - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை - மட்டு)

யாழ் - கரவெட்டி, துன்னாலைப் பகுதியில் இந்தி யப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குத லில் கொல்லப்பட்ட இளம் பெண், பருத்தித்துறை, திக்கம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு மட்டு - சந்திவெளிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக் கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**ஜோண்சன்** (கோபால் - சந்திவெளி - மட்டு)

1993-ம் ஆண்டு பொலநறுவை, மதுறோயா, தம்பிள்ள என்னுமிடத்தில் இராணுவ முகாமுக்கு உதவியாக அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ மினி முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**லெப். வர்ணச்சந்திரன் / ஜெயசீலன்** (நடராஜா நவரட்ணராஜா - இருதயபுரம் - மட்டு)

**2-ம் லெப். கதிரவேல் / வாமதேவன்** (மத்தியூஸ் தாயூ - சொறிக்கல்முனை - அம்பாறை)

மாதகல் பகுதியிலிருந்து முன்னேற முயன்ற சிறி லங்கா இராணுவத்தினர் மல்லாகம் பகுதியைநோக்கி ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரு பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8688)

# மாவின் விலை நிர்ணயம் கூட்டுறவுச் சங்கத்தின் கையில்

## யாழ். செயலகம் பின்வாங்குகிறது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாவின் நுகர்வோர் விலையை திர்மானிக்கும் பொறுப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடம் விடப்பட்டுள்ளது: யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்டு வந்த விலையின் கீழ் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் பாவனையாளர்கள் மாவை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இதனால் தட்டுப்பாடு நிலவிய காலத்திலும்கூட கட்டுப்பாட்டு விலையில் மாவை பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் பெற்றுக்கொண்டன.

ஆனால் இப்போது மாவின் நுகர்வு விலையானது பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் தீர்மானத்திற்கு விடப்பட்டுள்ளது. இந்த மாற்றத்திற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றது: எனினும் இந்த மாற்றத்தின் காரணமாக பாதிக்கப்படுவோர் பாவனையாளர்களே என்பதில் ஐயமில்லை:

இன்றைய காலகட்டத்தில் பல சுமைகளையும் சுமந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்கு செயலகத்தின் இந்த நடவடிக்கை மேலும் ஒரு சுமையாகவே இருக்கும் என பல தரப்பினரும் கருதுகின்றனர். பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்களில் உச்ச இலாபத்தை மட்டுமே கருத்தில்கொண்டு செயற்படுகின்றமை இங்கு பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது: இந்த நிலையில் மாவின் விலையை நிர்ணயிக்கும் பொறுப்பும் இவர்களிடம் விடப்படுவது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்;

பாவனையாளர்கள் பொதுவாக எந்த சந்தையில் எந்தப் பொருள் மலிவாக வழங்கப்படும் பொருட்கள் தொடர்பாகவும் பல முறைப்பாடுகள் கூறப்படுவதும் தெரிந்ததே;

உதாரணமாக மண்நெய் பங்கீட்டிற்கு வழங்கப்பட்ட போது சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் சில பலநோக்கு கூட்டுறவு சங்கங்களால் வழங்கப்பட்டு இருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கது. சகல அட்டைகளுக்கும் வழங்கப்படுவதற்கு செயலகம் தந்த மண்நெய் போதாது என்று கூட்டுறவு சங்கங்கள் கூற சங்கங்கள் தந்த பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கைகளுக்கு அதிகமாகவே எண்ணெய் வழங்கப்பட்டதாக செயலகம் தெரிவிக்கின்றது: இது விடயத்தில் எந்தக் கூற்று சரியானது என்பது முழுமையாக உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும் சகலருக்கும் மண்நெய் கிடைப்பதை உறுதிப்படுத்த பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் தவறிவிட்டதாகவே கருத முடியும்.

அண்மையில் பங்கீட்டு அட்டைக்கு நான்கு லீட்டர் மண்நெய் வழங்கப்பட்ட போதும், சில பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் இதுவரை மண்நெய்யைப் பெற்று பாவனையாளருக்கு விநியோகிப்பதில் போதிய ஆர்வம் காட்டவில்லை. இதனால் பணம் செலுத்திய நிலையிலும் கூட மிக அண்மை நாட்கள் வரை புனர்வாழ்வுப் பகுதியில் மண்நெய் தேங்கிக் கிடந்தது; பல நாட்களாக அடுத்தடுத்து விடப்பட்ட வேண்டுகோளின் பின்னரே இம் மண்நெய் சங்கங்களால் எடுத்துச்செல்லப்பட்டதாக அறியமுடிகிறது;

மேலும். இப் பகுதியில் எந்த பொருளுக்கு எப்போது தட்டுப்பாடு நிலவும் என்பது

இன்னும் பாவனைக்கு உதவாத உப உணவுப் பொருட்களைக் கூட மக்களின் தலையில் கட்டிவிட்ட சங்கங்களும், தராசு படிகளில் ஊழல் செய்த சங்கங்களும் இருக்கின்றன: சங்கங்களின் இத்தகைய நடவடிக்கையினால் கூட்டுறவு அமைப்பு மக்கள் சேவைக்கே தன்னை அர்ப்பணிப்பு செய்துள்ளது என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் மறைந்து வருகின்றது.

எனவே இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களிடம் விலை நிர்ணயிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படுவது பொருத்தப்பாடானதானா என்ற கேள்வி எழும்புகின்றது: சில தனியார் வர்த்தகர்களை விட உச்ச இலாபத்தை மையமாகக் கொண்டு செயற்படும் சங்கங்கள் விலையை நிர்ணயிக்க முற்பட்டால் அதன் பயனாக மக்கள் அனுபவிக்கும் துயரமும் தாங்கும் சுமையும் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் கூடுதலாகவே உள்ளன:

# பெப்ரவரிமாத நிவாரணம் விரைவில் விநியோகம்

(நமது நிருபர்)

இடம் பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய உணவு பொருள்கள் மற்றும் பால்மாவகைகளுடன் கொழும்பிலிருந்து வந்த கோமாரி கப்பலில் தீவுப்பகுதி இராணுவத்திற்கானபொருள்களும் எடுத்துவரப்பட்டதில் முதலில் காங்கேசன்துறை துறைமுகத்திற்குச் சென்று அவற்றை இறக்கிய பின்னரே உணவுப்பொருள்களை இறக்குவதற்கு பருத்தித்துறை துறை முகத்திற்கு வருமென தெரியவருகின்றது.

மேற்படி நிவாரணப் பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு முதலில் சென்று இராணுவத்தினருக்கான பொருளகளை இறக்கிய பின்னர் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருவதால் பலநாட்களின் பின்னே உணவுப்பொருள்கள் குடாநாட்டை வந்தடையும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை நிவாரணப் பொருள்களுடன் இனிமேல் வரும் சகல கப்பல்களிலும் இராணுவத்திற்கான ஒரு தொகுதி பொருள்கள் எடுத்து வரப்பட உள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி, நி)

# கொலரா பரவும் ஆபத்து பாடசாலை மூடப்பட்டது

## கொற்றாவத்தையில் இருவர் பலி

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள கொற்றாவத்தைக்கிராமத்தில் கொலரா நோய் வேகமாகப்பரவும் ...

...களின் நடமாடும் மருத்துவ சிகிச்சைப்பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது இக்கிராமத்தில் இந்நோய் வேகமாகப் பரவக்கூடியநிலை ஏற்பட்டுள்...

# பரிசளிப்பும் மலர் வெளியீடும்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது: விழாவிலே வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் திரு இ. ஞானவேல் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருமதி ஞானவேல் பரிசில்களை வழங்கினார். பதில் அதிபர். திரு கோ. குழந்தைவேல் நன்றியுரை நிகழ்த்தினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (25)

# பலசரக்குக்கடை தீயிடப்பட்டது

(தென்மராட்சி)

கொடிகாமம் எருவன்பகுதியில் உள்ள கடை ஒன்று இனந்தெரியாதவர்களால் தீயிடப்பட்டது.

கடந்த 31-ம் திகதி எருவனைச் சேர்ந்த சி. தங்கராசா என்பவரது பலசரக்கு கடையை இரவு வேளை இனம் தெரியாதவர்கள் தீமூட்டியுள்ளார்கள்: இதனால் கடையில்இருந்த 85001-ரூபாவிற்கு மேற்பட்ட பொருள்கள் நாசமாகியுள்ளன; பொதுமக்கள் தீயை உடன் அணைத்தனர். இது தொடர்பாக சாவகச்சேரி காவல் துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (86)

# சைக்கிளுக்கான இலக்கத் தகடுகள் விநியோகம்

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் துவிச்சக்கர வண்டிகளுக்கான 1994ஆம் ஆண்டிற்குரிய இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன.

மேற்படி பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்திலும், ஆனைக்...

# குழந்தையை அநாதரவாக விட்ட தந்தை!

(யாழ்ப்பாணம்)

நவாலி மணிமண்டப சிறுவர் இல்லத்திற்கு முன்பாக எட்டுமாதக் குழந்தையொன்று கைவிடப்பட்ட நிலையில் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு சிறுவர் இல்ல சைவப் புலவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கைவிடப்பட்ட குழந்தையின் தந்தை குழந்தையை பொறுப்பேற்க வந்த சமயம் அங்கிருந்த பொதுமக்கள் ஆத்திரம் கொண்ட நிலையில் அவரைத் தாக்கவும் கிளர்முற்பட்டனர்;

இதேவேளை ஏன் இந்த பெண் குழந்தையை தனிமையில் கைவிட்டு சென்றீர்கள் என நமது நிருபர் கேட்ட போது எனது குழந்தையைப் பார்க்க ஒருவருமில்லை: எனது மனைவி இறந்துவிட்டார். நான் தற்போது அகதியாய் இருக்கின்றேன் என பதிலளித்தார். (05)

# வீதிகள் திருத்தப்படுகிறது

(குருநகர்)

யாழ். காங்கேசன்துறை வீதி, யாழ். மானிப்பாய் வீதி என்பன திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மானிப்பாய் வீதியில் சுடுகாட்டு ஆலடிச் சந்தியில் இருந்து யாழ். நோக்கியும்-காங்கேசன்துறை வீதியில் யாழ்நகரில் இருந்து கொக்குவில் நோக்கியும் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. (21)

# 6ஆம் உலகதமிழர் இயக்க மாநாடு கனடாவில்

(ரொரன்ரோ)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு கழகத்தின் ஆறாவது மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் கனடாவின் ரொரன்ரோ நகரில் நடைபெறவுள்ளது. இதனைமுன்னிட்டுமேல்நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடையே தமிழ்ப் பண்பாட்டு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், மற்றும் கவிதை, சிறுகதைப் போட்டிகளை சர்வதேச ரீதியாக நடத்த கழகத்தின் கனடாக்கிளை முடிவு செய்துள்ளது.

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

## 14-வது இசைவிழா

12-ம் நாள் 23-2-94

புதன்கிழமை

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில்

மாலை

4.00 - 5.00 மங்கள இசை

ஏ. மகேந்திரன் )
கே. கிருஷ்ணதாஸன் ) நாதஸ்வரம்
எஸ். தேவதாஸன் )

இவர்களிடம் விடப்படுவது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்;

பாவனையாளர்கள் பொதுவாக எந்த சந்தையில் எந்தப் பொருள் மலிவாக கிடைக்கும் என்று திரிந்து பொருட்களை கொள்வனவு செய்வர். பலநோக்கு கூட்டுறவு சங்கங்களே மாவின் விலையைத் தீர்மானிக்கும் நிலை ஏற்படும்போது மாவின் விலை சங்கத்திற்கு சங்கம் வேறுபடும்; இந்த ஏற்ற இறக்கம் பாவனையாளர் மத்தியில் விசனத்தையும், சலனத்தையும் ஏற்படுத்தலாம்.

உணவு முத்திரை மற்றும் மாணவர் முத்திரைக்கு வழங்கப்படும் பொருட்களின் விலைகளில் இத்தகைய வேறுபாடு இருப்பது ஏற்கெனவே அவதானிக்கப்பட்ட ஒன்றாகும். மக்கள் இம் முத்திரைகளுக்கு பெறும் நுகர்பொருட்கள் ஒரே அளவில் இருப்பதில்லை என்பதும் கவனிக்கப்படக்கூடியதே- மேலும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பின்னரே இம் மண்ணெய் சங்கங்களால் எடுத்துச்செல்லப்பட்டதாக அறியமுடிகிறது;

மேலும் இப் பகுதியில் எந்த பொருளுக்கு எப்போது தட்டுப்பாடு நிலவும் என்பது யாரும் எதிர்வு கூற முடியாதது ஆகும்; இந்த நிலையில் சங்கங்கள் சுதந்திரமாக விலை நிர்ணயம் செய்ய அனுமதிக்கப்பட்டால் திடீரென பொருட்களின் விலையை உயர்த்தக் கூடியதாகவும் அமைந்துவிடலாம், அத்துடன் கறுப்புச் சந்தைக்குப் பொருட்கள் செல்வதும் அதிகரிக்கலாம். அண்மையில்கூட மாவின் விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டபோது ஒரு பலநோக்குக் கூட்டுறவு சங்கம் அதன் வசமிருந்த மாவை முழுமையாக ஒரு இரு சக்கர உழவு யந்திரத்தில் ஏற்றி தனியார் வர்த்தகர் ஒருவருக்கு அனுப்பி வைத்த செயல் கண்டு பிடிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதே;

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள கொற்றாவத்தைக்கிராமத்தில் கொலரா நோய் வேகமாகப்பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக்கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் கொலரா நோயினால் பீடிக்கப்பட்ட இருவர் பலியாகியுள்ளனர் 15 மாணவர்கள் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் இதனையடுத்து இக்கிராமத்திலுள்ள கொற்றாவத்தைஅமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையைத் தற்காலிகமாக மூடிவிடுவதற்கு பருத்தித்துறை கோட்ட பிரதிகல்விப் பணிப்பாளர் திரு. தி. செல்வரத்தினம் அனுமதி வழங்கியுள்ளார். இக்கிராமத்தின் இப்பயங்கர நிலைபற்றி கிராம சேவை அலுவலர், பாடசாலை அதிபர் ஆகியோர் கல்வித்திணைக்களத்திற்கும்சுகாதாரத்திணைக்களத்திற்கும் அவசரமாக அறிவித்திருந்தனர்; தமிழீழவிடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவ சிகிச்சைப்பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது இக்கிராமத்தில் இந்நோய் வேகமாகப் பரவக்கூடியநிலை ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பலத்த அச்சமும் பீதியும் அடைந்துள்ளனர்; சுகாதாரத்திணைக்களம் கொலராநோய் தடுப்பிற்கான துரித அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும்அறிவிக்கப்பட்டுள்ளது (25)

## மாசி மகத் திருவிழா

(குருநகர்)

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாசி மகத் திருவிழா சிறப்பாக நடைபெற இருக்கிறது; (21)

க்கத் தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன;

மேற்படி பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்திலும், ஆனைக்கோட்டை உப அலுவலகத்திலும் காரியாலய நேரத்தில் துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச சபை செயலாளர் திரு. இ. கணேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## மீனவர்ஒருவரின் சடலம் ஒதுங்கியது

(கிளிநொச்சி)

பூனைத் தொடுவாய் கடற்பகுதியில் கடற்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட இன்னொருவரின் சடலமும் கரை ஒதுங்கியுள்ளது.

அந்தோனிப்பிள்ளை யாக்கோப்பிள்ளை என்பவரின் சடலமே கரை ஒதுங்கியுள்ளது;


**4.00 - 5.00 மங்கள இசை**

ஏ. மகேந்திரன் )
கே. கிருஷ்ணதாஸன் ) நாதஸ்வரம்
எஸ். தேவதாஸன் )

என். ஜெயானந்தன் )
என். மூர்த்தி ) தவில்
ஜே. கண்ணன் )

**5.00 - 5.20 பாட்டு**

வை. கல்யாணி )
வை. யசோதை ) பாட்டு
எஸ். சசிரேகா )

சுகிர்தா - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**5.20 - 5.40 புல்லாங்குழல்**

ரஞ்சனி ராமலிங்கம் )
இந்திரா பொன்னுதுரை ) புல்லாங்குழல்
சுரேந்தினி சிதம்பரநாதன் )

க. சுஜித்ரா - வயலின்
ம. சுஜன் - மிருதங்கம்

**5.40 - 6.15 பாட்டு**

ரி. சந்தானலட்சுமி - பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா - வயலின்
சதாவேல்மாறன் - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**

சக்திதேவி சிவகுமார் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

வி. எஸ். பாலச்சந்திரன், எஸ். சுப்பிரமணியம்
(பொம்பே செல்வரெட்ணம்(செல்வம்ஸ்நெடுங்கேணி)
கு. இராமச்சந்திரன் (கோல்டன் செரமிக்)

அருள் உரை:- திரு. பிரம்மஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள்
(பிரதமகுரு நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்)

தலைவர்:- மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ

பிரதம விருந்தினர்:- திரு. ஈ. சரவணபவன்
(நிர்வாக இயக்குனர் உதயன் நிறுவனம்)

சிறப்பு விருந்தினர்:- திரு. கே. எம்.பஞ்சாபிகேசன்
(நாதஸ்வர வித்துவான்)

**7.30 - 8.30 வீணை இசை**

நந்தினி விஜயரத்தினம் - வீணை
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
சதா வேல்மாறன் - கடம்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**

திருமறைக் கலாமன்ற மாணவிகளும்
நளாயினி இராஜதுரை அவர்களின் மாணவிகளும்
இணைந்து வழங்குவார்கள்
தயாரிப்பு:- நளாயினி இராஜதுரை

வாழ்த்துவோர்

**சைமன் வர்த்தக நிலையம்**

பலாலி றோட், திருநெல்வேலி.

(கி-8690)


# தமிழககாவல்துறையினரின் இயக்குநர் விபத்தில் காயம்

(சென்னை)

தமிழக காவல்துறையின் மேலதிக தலைமை இயக்குநர் வால்டர் தேவாரம்நேற்று முன்தினம்வீதிவிபத்து ஒன்றில் காயமடைந்தார். விபத்தில் சிக்கிய இவரின் ஜீப் பொலிஸ் சாரதி ஸ்தலத்தில் பலியானார்;

மதுரையில் ஆண்டிப்பட்டி அருகே இவரின் ஜீப் அரச போக்குவரத்துக்கழக பஸ் ஒன்றுடன் மோதியது; இதனால் இவர் காயமடைந்து மதுரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஜீப் சாரதி பலியானார்; காயமடைந்த தேவாரத்தை சென்னை கொண்டுவந்து சிகிச்சை அளிக்க அனைத்து ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்;

# தமிழக மீனவர் கொலை; பிரதமர்கண்டிக்கவேண்டும்

### முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

சிறிலங்கா கடற்படையினர் கடந்த சனியன்று நடத்திய தாக்குதலில் இராமேஸ்வரத்தை சேர்ந்த இரு மீனவர்கள் பலியானதற்கு பிரதமர் நரசிம்மராவ் சிறிலங்கா அரசிடம் வன்மையாக கண்டனம் தெரிவிக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா வற்புறுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறும் அவர் ராவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அப்பாவி மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என தாம் பலமுறை மத்திய அரசிடம் கேட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடாக 10 ஆயிரம் ரூபா உதவித்தொகையைதமிழக அரசு வழங்கியுள்ளது.

## பண்ருட்டி முயற்சி

(சென்னை)

சட்டசபையில் எந்தக் கட்சியையும் சாராதவர்களின் கட்சி என்ற புதிய கட்சி ஒன்றை தாம் தொடங்க இருப்பதாக பாட்டாளி மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவரான பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் கூறியுள்ளார்;

தற்போது தமிழக சட்டப் பேரவையில் எந்தக் கட்சியையும் சாராதவர்கள் என்ற வகையில், டாக்டர் குமாரதாஸ், மற்றும் அ. இ. அ. தி. மு. க. விலிருந்து நீக்கப்பட்ட அழகு திருநாவுக்கரசு, ஜி. விசுவநாதன், ராஜாராம் ஆகியோர் இருப்பதாகவும், எந்தக் கட்சியையும் சாராதவராக இருக்கவேண்டிய சபாநாயகர் தமது தலைவராக இருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் தமக்கு தனியிடம் ஒதுக்க வேண்டுமென சபாநாயகரிடம் விரைவில் கோர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதே வேளை தமிழக ஆளுநர் சென்னாரெட்டியையும் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, சபீர் முகமது ஆகியோருடன் சென்று இராமச்சந்திரன் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

# பொஸ்னியாவில் மீண்டும் மோதல்கள் நடந்தன

(சரஜேவோ)

பொஸ்னியாவின் சுற்றுப் பகுதிகளில் நேற்று முன்தினம் மீண்டும் சண்டைகள் இடம் பெற்றுள்ளன. தலைநகரான சரஜேவோவை முற்றுகையிட்டிருந்த சேர்பிய படைகள் கனரக ஆயுதங்களை விலக்கியதன் மூலம் விமானத்தாக்குதலை தவிர்த்த சில மணி நேரங்களின் பின்னர் இச் சண்டைகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது; அரசாங்கத் துருப்புக்கள் மீது சேர்பியர்களும், வடமேற்கு பொஸ்னியாவில் பிரித்து சென்றுள்ள பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் படைகளும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்; பொஸ்னியாவின் ஏனைய பகுதிகளில் குரோசியப் படைகளுடன் பொஸ்னியர் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

பொஸ்னியாவில் சண்டையை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருவதாக அமெரிக்க விசேட தூதுவர் கூறியுள்ளார்; இதேவேளை பொஸ்னியத் தலைநகரை ஐ. நா. நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும்படி பிரான்ஸ் ஐ. நா. சபையைக் கோரவுள்ளது;

இதனிடையே நேட்டோ நாடுகளின் யுத்த விமானங்கள் சரஜேவோவை சுற்றி கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

# சட்டப்பேரவைக்கு செல்ல ராமராவ் நிபந்தனைவிதிப்பு

ஆந்திர முதல்வர் விஜய பாஸ்கர ரெட்டி வருத்தம் தெரிவித்தால் மட்டுமே சட்டப்பேரவைக் கூட்டங்களில் தான் கலந்து கொள்ள முடியும் என்று தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் என். டி. ராமராவ் கூறியுள்ளார்,

ஐதராபாத்தில் தெலுங்கு தேச கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின் செய்தியாளர்கள் மத்தியில் பேசியஅவர் மேலும் கூறுகையில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கான கௌரவத்தை நிலைநிறுத்திட இந்தமுடிவை எடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

# செல்லச்சாமி பெரிய மனிதராகியது இ.தொ.காவின்கட்டுப்பாட்டினாலேயே

## தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

சாதாரண மனிதனான செல்லச்சாமி அமைச்சராகியதும் பெரிய மனிதராகியதும் காங்கிரஸ் கடைப்பிடித்த கட்டுப்பாட்டினாலேயே ஆகும். பெரிய மனிதர்களை உருவாக்குவதே எமது விருப்பம் ஆகும் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பில் மேல்மாகாண இ.தொ.கா அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய தொண்டமான் மேலும் கூறுகையில், இப்பொழுது எழுந்துள்ள பிரச்சினைகளைக் கண்டு பயப்பட வேண்டாம் இந்தத் தொண்டமான் எந்தப் பிரச்சினையைக் கண்டும் அஞ்சியதில்லை. நாம் இறக்கத்தயாராகஇருந்தால் எந்தப் பிரச்சினையைக் கண்டும் பயப்படத்தேவையில்லை 83-ம் ஆண்டின் கலவரத்தின் போது மலையகத்தவர்கள் இந்தியா செல்வதா? வவுனியாவுக்கு செல்வதா? என்று பயந்து கொண்டு இருந்தனர் பிறந்த நாங்கள் ஒரு நாளைக்கு இறக்கத்தான் போகிறோம் எனக்கூறி நான் அவர்களை சாந்தப்படுத்தினேன்.

நாம் உறுதியாக இருப்போம் நாம் யாருக்கும் அஞ்சி வாழ வேண்டியது இல்லை இருக்கும்வரை மானத்தோடும் மரியாதையோடும் வாழ்வோம் அப்பொழுது ஏனையோர் எம்மைக் கண்டு சூரியன் முன்னால் பனிபோல் உருகிவிடுவார்கள்.

ஜனாதிபதி சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவில்லை. தோட்ட மக்களின் குரலுக்கு செவி சாய்க்கவும் இல்லை இதனாலேயே தொண்டமான் அரசாங்கத்திற்கு பாடம் படிப்பிக்க முடிவு செய்தார்.

மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்த பொதுச்செயலாளர் தனது மக்களுக்காகவும், தனது சமுதாயத்திற்காகவும் தலைவரின் கட்டளையை ஏற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் தனது பதவி பறிபோய்விடும் என்பதற்காக அதை ஏற்கவில்லை இச்செயலை மன்னிக்க முடியாது மன்னித்தால் இது தொடர்ந்து நடைபெறும். எனவே இதை நிறுத்தும் கடமை தொண்டமானுக்கும் இ.தொ.காவிற்கும் உண்டு என்றும் தெரிவித்தார்.

## மகளிர் தினம் கொண்டாட ஏற்பாடு

அனைத்துலக மகளிர் தினத்தை சிறந்த முறையில் கொண்டாடுவதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடுகளைச்செய்து வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு இடையே விவாதப் போட்டிகளையும், கலை நிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் சிறந்த சேவையாற்றி வரும் சிறந்த மகளிரை கௌரவிக்கவும் மகளிர் அபிவிருத்தி நிலையம் திட்டமிட்டுள்ளது.

## கொழும்புநீதிமன்றம் முன் செய்தியாளர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பத்திரிகையாளர் றிச்சர்டி சொய்சா கொலை தொடர்பாக சுதந்திரமானதும் நீதியானதுமான விசாரணையை நடத்தக்கோரி, இலங்கை வெகுஜன தொடர்பு அமைப்பு, வெள்ளிக்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 150க்குமேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

கொலைக்குப் பயந்து உண்மையை மறைக்க மாட்டோம் நீதித்துறை- சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் பேணப் படவேண்டும் என்ற சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கிய வண்ணம் காணப்பட்டனர்.

தென்மாகாணத்தில்

## கிராமசேவகரை அழைத்து அமைச்சர் மிரட்டல்

## சிரமதானம் மூலம் வேலி திருத்தப்பட்டது

(தொல்புரம்)

தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையின் வளவிற்கான வேலிகள் சிரமதானப் பணி மூலம் செப்பனிடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி வைத்தியசாலை ஊழியர்களின் விடாமுயற்சியின் பயனாக தொல்புரம் பரிபோவான் முதலுதவிப் படையின் வெளிவாரிப் பிரிவுத் தொண்டர்களால் சிரமதான அடிப்படையில் ஆஸ்பத்திரி

## தாதிகள் பயிற்சி நெறிக்கு குறைந்தளவினர் சேர்ப்பு

(நமது நிருபர்)

"தாதிகள் பயிற்சி நெறிக்கு போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காமையால் தேவையான எண்ணிக்கையானோரை பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது" இவ்வாறு மருத்துவமனை பணிப்பாளர் எமதுநிருபருக்குதெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் வர்த்தமானி அறிவித்தல்கள் காலம் கடந்த பின்னரே இங்கு வந்து சேர்ந்தன. இதனாலேயே அனேகமானோர் இந்த பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கமுடியாமல் போய்விட்டது. இம்முறையும் இப்பயிற்சிக்கான வர்த்தமானி அறிவித்தல் பிந்தியே இங்கு கிடைத்ததால் அண்மையில் கொழும்பு சென்ற அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரிடம் இப்பயிற்சிக்கு ஆட்களை சேர்ப்பதற்கான இறுதி திகதியை யாழ். குடாநாட்டிற்கு பிற்போட நடவடிக்கை எடுக்குமாறுகேட்டிருந்தேன். அதன்படி அரச அதிபர் எடுத்த நடவடிக்கையினால் அத்திகதி பிற்போடப்பட்டு அப்பயிற்சிக்கு பலர் விண்ணப்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது என்றார்.

இதுபற்றி அரச அதிபரிடம் எமது நிருபர் கேட்டதற்கு அவர் தெரிவிக்கையில் தற்போது இப்பயிற்சி நெறிக்கு 50 பேர் விண்ணப்பங்களை தன்னிடம் அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். (சி)

குண்டு வீச்சுக்குள்ளான

## சாவகச்சேரி தேவாலயம் திருத்தப்படுகிறது

(தென்மராட்சி)

கடந்த மார்கழி மாதம் 30 ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா விமானப்படையினரின் விமானத்தின் றொக்கெற் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்த தென்னிந்திய திருச்சபை தேவாலயமும், குருமனையும் திருத்தப்பட்டுவருகின்றன.

ஆலய வழிபாட்டுத் தலம் மிகவும் மோசமான நிலையில் சேதம் அடைந்திருந்தது. தற்போது சகல வேலைகளும் முடிவடையும் நிலையில் உள்ளன. குருமனையும் திருத்தப் பட்டுவருகின்றது.

நஷ்டஈடுதொடர்பாகஅரச அதிபரிடம் ஏழரை லட்சம் ரூபா கோரி மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. (86)

## பொதுசன உதவிப்பணம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி தபாலகத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர் 1994 ஆம் ஆண்டு தை மாதத்திற்குரிய உதவிப் பணத்தினை எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தபாலக அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளும்படி தபாலக அதிபர் கேட்டுள்ளார்.

## ஆய்வரங்கு

தமிழ்த்துறை ஆய்வரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில்

சுய விருப்பின்கீழ் ஓய்வு பெற்றோர்

## ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்ற அனுமதி

(கொழும்பு)

ஓய்வு பெறும் வயதை அடைய முன்னர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் தாம் விரும்பினால் ஒப்பந்த அடிப்படையில் அரசாங்க சேவையில் ஈடுபடமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் அரசாங்க சேவையில் ஈடுபட விரும்புவோர் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவர் என்றும் தொடர்ந்தும் ஒப்பந்தத்தை நீடித்துக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முந்தல் பகுதி தமிழர்விபரம் பொலிஸ் திரட்டுகிறது

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்திலுள்ள முந்தல் பொலிஸ் நிலையப் பகுதிக்கு உட்பட்ட தமிழ்க் கிராமங்களில் வாழும் தமிழ்க் குடியிருப்பாளர்களின் விபரங்களை திரட்டும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் அமைந்துள்ள உடப்பு, ஆண்டிமுனை, முந்தல், கருங்காலிச்சோலை, பூனைப்பிட்டிபோன்ற தமிழ்க் கிராமங்களில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் விபரங்கள் இவ்வாறு திரட்டப்பட்டு வருவதாக முந்தல் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. டபிள்யூ. இஷ்ஹாக் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு பகுதியில் வீதிச்சோதனை அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பில் பாதுகாப்பு அரண்கள் அதிகரித்து வருகின்றன. அத்தோடு வீதிச்சோதனைகளும் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

வாக்குச் சாவடி அமைக்கப்படும் 160 இடங்களில் சாவடிகளைச்சுற்றி கடும் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட இருக்கிறது.

வாக்குச் சாவடிகளுக்கு 400 யாருக்கு அப்பாலேயே வாக்காளர் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவித்தல் வழங்கப்பட இருக்கிறது.

பார்த்தால் குதிப்பீர்கள்! தவறவிட்டால் தவிப்பீர்கள்!!
விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து தரும்



★
முல்லை

# கிராமசேவகரை அழைத்து அமைச்சர் மிரட்டல்

(கொழும்பு)

மார்ச்மாதம் 24-ம் திகதி நடைபெறவுள்ள தென் மாகாணசபை தேர்தல் தொடர்பாக தற்போது அரசாங்கம் பல வன்முறைகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகின்றது.

அமைச்சரவை மட்டத்திலான தென்மாகாணத்தை சேர்ந்த அமைச்சர் ஒருவர் தனது வீட்டிற்கு அப்பகுதி கிராம சேவகர்களை வரவழைத்து தனக்கு தேர்தல் வேலைகளை செய்யுமாறு வற்புறுத்தியுள்ளதாக அத்தகவல் மேலும் தெரிவிக்கின்றது. இதேவேளை சிலர் வீடு வீடாகச்சென்று ஆளும் கட்சிக்கு வாக்களிக்குமாறும், தவறும் சமயத்தில் தாக்கப் படுவதாகவும் மிரட்டப்பட்டுள்ளது.

## கடற்படை பாதுகாப்பு

(கொழும்பு)

கற்பிட்டியிலும் அதன் அருகில் உள்ள பகுதியிலும் உள்ள மீனவர்களுக்கு கடற்படையும் இராணுவமும் பாதுகாப்பு வழங்கும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இப்பகுதியில் இரவில் மீன் பிடிப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது

சிங்களத் திரைப்படம்

# இராணுவத்தினருக்கு இலவச காட்சி

(கொழும்பு)

''நொமிய யன மினுசு'' என்ற சிங்கள திரைப்படம் இராணுவத்தினருக்கு இலவச காட்சியாக தற்போது காண்பிக்கப்படுகின்றது தற்போது கொழும்பு றீகல் படமாளிகையில் காண்பிக்கப்படும் இப் படத்தின் காலைக் காட்சி இராணுவத்தினருக்கு இலவசமாக காண்பிக்கப்படுவதாகவும், ஏனைய காட்சிகளில் இருந்து பெறப்படும் நிதி இராணுவத்தின் நலனுக்கு பயன்படுத்த இருப்பதாகவும் இப்பட தயாரிப்பாளர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இன்னும் சில வாரங்களில் மேற்படி திரைப்படத்தை முன்னணி இராணுவ முகாம்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அவர்தெரிவித்தார்,

# அரச வாகன பாவனை; ஆராய குழு நியமனம்

அரசுக்குச் சொந்தமான வாகனங்களை ஊழியர்கள் பயன்படுத்துவது தொடர்பாக அரசுக்கு சிபார்சுகளைச் செய்வதற்காக அமைச்சுகளின் மூன்று செயலாளர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது;

நீதிபரிபாலன அதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களால் உபயோகிக்கப்படும் அரச வாகனங்களின் உபயோகம் தொடர்பாகவே இக் குழு ஆராய்ந்து சிபார்சுகளை செய்யவுள்ளது;

# நல்லினக் காளை கொழும்பிலிருந்துதருவிப்பு

முல்லை மாவட்டத்தில் மன்னாகண்டல் பகுதியில் நல்லின மாடுகளை உருவாக்கும் பொருட்டு கொழும்பிலிருந்து இரண்டு நல்லின காளைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுவினர் இறக்குமதி செய்துள்ளனர்:

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு காளைகளையும் கொண்டு கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காளை சேவை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இவ் வருடம் தை மாதம் தொடக்கம் அப்பகுதி மக்களுக்கு சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது:

யின் பயனாக தொல்புரம் பரியோவான் முதலுதவிப் படையின் வெளிவாரிப் பிரிவுத் தொண்டர்களால் சிரமதான அடிப்படையில் ஆஸ்பத்திரி வளவிற்கான வேலிகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இப்படியான பொதுப்பணிகள் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமூக மேம்பாட்டிற்கும் அயராது உழைத்துவரும் தொல்புரம் பரியோவான் முதலுதவிப்படையினரையும் ஆஸ்பத்திரி ஊழியர்களையும் வைத்திய அதிகாரியையும் மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். (41)

## கிருமிநாசினி அருந்தி மரணமானார்

(தென்மராட்சி)

நாவற்காடு வரணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்

இவர் கிருமிநாசினியை அருந்தியவுடன் வீட்டார் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றபோதும் வழியில் மரணமானார். வீரசிங்கம் நல்லதம்பி 32வயது என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார். (86)

தமிழ்த்துறை ஆய்வரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது, ''தமிழ் இலக்கியத்தில் பெண்களின் இழிதகமைகள்'' என்னும் பொருளில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுரை வழங்கவுள்ளார்.

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

யாழ். மாநகரசபை சிறாப்பர் திரு ச. இராமச்சந்திரன் பருத்தித்துறை நகர சபைக்கும், பருத்தித்துறை நகர சபை சிறாப்பர் திரு க. தங்கராசா யாழ் மாநகர சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுப் பொறுப் பேற்றுள்ளனர் (25)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''வடக்கு-கிழக்கில் சமூக சுகாதார கோட்பாடுகளும் அவற்றின் நடைமுறை தாக்கங்களும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கினை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறையினரின் சமூக விஞ்ஞான மன்றத்தினரால் (SSU) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)

# சேதமாக்கப்பட்ட படகு நடுக்கடலிலிருந்து மீட்பு

(தென்மராட்சி)

கடந்த வருடம் கடற்படையினரால் சேதமாக்கப்பட்ட பொருள்கள் ஏற்றும்படகுகள் பல நடுக்கடலில் கிடப்பதாக மீனவர்கள் எமது நிருபருக்கு தெரிவித்தனர்.

தாம் மீன்பிடிக்க சென்ற போது நடுக்கடலில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு கடலில் தட்டுப்பட்டதாகவும் அது துருப்பிடித்து காணப்பட்டதாகவும் அதேவேளை கடந்த 18ஆம் திகதி (சுவரி பிலிஸ்) என்ற பெயருடைய படகு ஒன்று அனாதரவாக கடலில் கடற்படையினரால் சேதமடைந்த நிலையில்தாம் மீட்டு கரை கொண்டு வந்ததாக கிளாலியைச் சேர்ந்த எஸ். நல்லதம்பி என்ற கடற்தொழிலாளர் எமது தென்மராட்சி நிருபருக்கு தெரிவித்தார். இப்படகுகள் போன்ற பல படகுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். 18ஆம் திகதி மீட்கப்பட்ட படகு பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த விநாயகம் இராசேந்திரம் என்பவரது என தெரியவருகிறது. (86)

# வாழைச்சேனை பகுதியில் கோஷ்டி மோதல் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை முஸ்லிம் பிரதேசம் மற்றும் ஓட்டமாவடி ஆகிய இடங்களில் கட்சி ஆதரவாளர்களிடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. உள்ளூராட்சி தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் கோஷ்டி சண்டைகள் தீவிரமடைந்து ஒரு சிலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஐ. தே. க. ஆதரவாளர்களுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்குமிடையே இத்தகைய மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடவே மக்கள் அச்சமடைவதாக ஓட்டமாவடி மக்கள் தெரிவிக்கின்றனர்;




முல்லை மாவட்ட கலைஞர்களின்

முத்துக்கள் இரண்டு

பாயும்புலி பண்டாரவன்னியன்

(வரலாற்று நாடகம்)

ஆக்கிரமிப்பாளரின் அவலம்

(இசை நாடகம்)

இடம்: புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலை

காலம்: 23-02-94 மாலை 7.00 மணி

அன்பளிப்பு: 1000/- 500/- 15/- 10/-

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும்

விளம்பர அன்பளிப்பு:

யோகாஸ் புடவை அகம்

16 B, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

கிளை:

குமார் ரெக்ஸ்

முத்திரைச் சந்தி, யாழ்ப்பாணம்.

(7586)

சிந்தனைக்கு

ஆற்றலும், அவசியமும் அருகருகே குடியிருக்கின்றன.

— பைத் தேகரஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

## போராடாது விடிவில்லை வாழ்வில்லை

சிறிலங்கா அரசிற்கு ''உணவைவிட போர் முதன்மையாகிப் போனது'', ''நாட்டின் அழிவை விட யுத்தம் அத்தியாவசியம், அவசியமாகிறது'' இதில் சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெளிவாகவே உள்ளார். ''இந்த நாட்டிற்கு என்னதான் கேடு விளைந்தாலும் இலங்கையை ஒற்றையாட்சியின் கீழ் வைத்திருக்கும் யுத்தத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை'' என அவர் வெளிப்படையாகவே தெரிவித்து விட்டார்.

டி. பி. விஜேதுங்கா யுத்தத்தில் மட்டுமல்ல தனது குறிக்கோளிலும் தெளிவாகவே உள்ளார். ''இந்த நாட்டின் 78 சதவீத பெரும்பான்மை இனத்தினரின் உணர்வுகளை 22 சதவீத சிறுபான்மையினரின் தேவைகளை மையமாகக் கொண்டு உதாசீனம் செய்ய முடியாது. முழுநாட்டினது ஆட்சியும், அதிகாரமும் பெரும்பான்மை இனத்தின் கைகளிலேயே இருக்க வேண்டும். சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பை பெரும்பான்மையினர் வழங்குவார்கள். ஆனால், நாட்டின் எப்பகுதியிலும் சிறுபான்மையினரிடம் பெரும்பான்மையினரின் பாதுகாப்பை ஒப்படைக்க முடியாது. அதனை என்னால் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது'' என்பதே அவரது தெளிவான குறிக்கோளாகும்.

அதாவது இலங்கையின் எப்பகுதியிலும், சிறுபான்மை இனங்களின் தனித்துவமும், அதிகாரமும் இருக்கக் கூடாது. அவர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் சிறுபான்மையினராக பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தின் கீழேயே இருக்க வேண்டும்! இருக்க

# தென்னாசியாவில் அணுவாயுதப் போர்

# இரு தடவை மயிரிழையில் தவிர்ப்பு!

1986 செப்டம்பர் பாகிஸ்தான் சாகால் பகுதிக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த அமெரிக்காவின் சக்தி வாய்ந்த உளவு செயற்கைக் கோள் இப்பகுதியில் பாகிஸ்தானிய இராணுவத்தின் ட்ரக் வண்டிகள் வரிசையாக செல்வதை திடீரெனக் கண்டு கொண்டது. இந்த ட்ரக்வண்டிகள் அருகிலிருக்கும் பாகிஸ்தானிய விமானப் படைத்தளத்திற்கு சென்று கொண்டிருந்தன. அங்கே எப்-16 யுத்த விமானங்கள் இந்தியா மீது அணுக்குண்டுகளை வீசத் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததையும் அந்த செயற்கைக் கோள் கண்டுகொண்டது. செயற்கைக் கோள் எடுத்த படங்களை அமெரிக்க் சி. ஐ. ஏ. உளவு ஆய்வாளர்கள் வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்குக் காட்டியபோது அவர்கள் அதிர்ந்து போய் விட்டனர். இறுதிநேரத்தில் அமெரிக்கா ரஷ்யா மேற்கொண்ட முயற்சி உபகண்டத்தில் அணு ஆயுதப் போர் வெடிக்கும் அபாயத்தை நீக்கியது.

1992 டிசம்பரில் பாபரி மசூதி தகர்ப்புமேலும் கொதிப்பு நிலையைத் தோற்றுவித்தது. பல முஸ்லிம்கள் கலவரத்தில் கொல்லப்பட்டனர். பழிவாங்க பம்பாயில் தொடர் குண்டு வெடிப்புகள் மேற்கொள்ளப்பட்டது. மீண்டும் இந்தியாவும் பாகிஸ்தானும் போருக்கு ஆயத்தமாகின. ஆனால் கடைசி நேரத்தில் பின்வாங்கி விட்டன. அமெரிக்காவின் நண்பனாக இருந்த பாகிஸ்தான் அமெரிக்காவினால் கைவிடப்பட்டு விட்ட

### அணு ஆயுதத்திற்காக ஆலாய்ப் பறந்தனர்

1990 ஜூன் மாத இறுதிப் பகுதி காலைவேளை பாகிஸ்தானிய பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோவுடன் இரு அமெரிக்கர்கள் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் ஒருவர் பீட்டர் கால்ப்ரெய்த் பெனாசீருடன் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் பயின்றவர்- பாகிஸ்தான் பிரதமரே நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் முப்படைத் தளபதி- ஆனால் இப்படிப்பட்ட உன்னதமான நிலையில் இருந்தும் நாட்டின் சில முக்கிய இரகசியங்கள் தெரியாமல் இருந்தது- இதைத்தான் அந்த இரு அமெரிக்கர்களும் பெனாசிருக்கு கூறிக் கொண்டிருந்தனர்- நாட்டின் தலைவி என நீங்கள் நினைப்பினும் நாடோ அரசோ உங்கள் கட்டுக்குள் இல்லை என அவர்கள் கூறினர்- அங்கிருந்தமற்றொரு அமெரிக்கரான மார்க் ஸீகல் வாஷிங்டனில் பூட்டோவின் ஆதரவாளராக இருந்தவர்- கார்ட்டர் காலத்தில் வெள்ளை மாளிகையில் யூத இனத்தின் ஆலோசகராக ஸீகல் இருந்தார்- ஸீகலின் விசுவாசம் பாகிஸ்தானை அமெரிக்காவின் நிதி உதவி பெறும் நாடுகளில் மூன்றாவது நிலைக்குக் கொண்டுவந்திருந்தது-

பாகிஸ்தானியர்கள் அணுகுண்டிற்காக ஆலாய்ப் பறக்கின்றனர் என விடாமல் வந்த செய்தி சங்கடங்களை விளைவித்தன- அதற்காகவே பெனாசீரை சந்தித்துப் பேச ஸீகலும், கால்ப் ரெய்த்தும் அங்கு வந்திருந்தனர்-

கால்ப்ரெய்த்தும், ஸீகலும் கூறிய தகவல்கள் பெனாசீர் எதிர்பாராதது- தனது நாட்டின் அணு ஆயுதத் திட்டத்தைப் பற்றி அவர் அறிவார்- இவரின் தந்தையாரான அலி பூட்டோ ஷியாவினால் தூக்கிலிடுவதற்குமுன் எழுதிவைத்திருந்த அரசியல் ஆவணம் ஒன்றில் இஸ்லாத்திற்கு அணுகுண்டு அவசியம் எனத் தாம் கருதுவதாக எழுதியிருந்தார் இத்திட்டத்தை ஷியா சீன, ஜேர்மனிய, அமெரிக்க தொழில்நுட்பத்துடன் தொடர்ந்தார் என்பது பெனாசீருக்குத் தெரியும்-

ஷியா ஒரு உதவாக்கரையாக இருந்த போதிலும் ஆப்கானிஸ்தானில் சோவியத்தை முறியடிக்க அமெரிக்கா பாகிஸ்தானை பயன்படுத்துகிறது- தவிர அதன் அணுசக்தி முன்னேற்றத்திற்காக இல்லை என அறியக் கூடியளவுக்கு அவர் கூர்மையான அரசியல் வாதிதான்- ஆப்கானுக்குள் நுழையும் சோவியத் டாங்கிகளும் ரொக்கட்டுகளும் தனக்குஇலாபம் தரும் என ஷியா புரிந்து கொண்டார்- இப்போது வாஷிங்டனுக்கு கம்யூனிச ஆக்கிரமிப்பைத் தடுக்க அவசியமான அரணாக ஷியா தென்பட்டார்- இதனால் பெருமளவு அமெரிக்க நிதியுதவி கிடைக்கும் வாய்ப்பும் உண்டு.

தாமதமாகவே தெரியவந்து அதிர்ச்சிக்குள்ளானாலும் பிரதமர் பெனாசீருக்கு இதற்கு காரணம் காஷ்மீர் என்பதை யாவது உடனடியாக புரிந்து கொண்டார். காஷ்மீருக்காக இந்தியாவும் பாகிஸ்தானும் நான்கு முறை போரிட்டிருந்தன 1962இல் சீனாவிடம் இந்தியா லடாக்கில் நடந்தபோரில் தோற்றபோது அணுகுண்டை உருவாக்க இந்தியா திடசங்கற்பம் பூண்டதைப் போல் கிழக்கு பாகிஸ்தானை இந்தியா பங்களாதேஷாக மாற்றிய போரின் பின்னர் பாகிஸ்தானும் அணுகுண்டு உருவாக்க திடசங்கற்பம் பூண்டது.

இந்தியாவிடம் இன்னோர் முறை தோற்றால் மீதமுள்ள பாகிஸ்தானும் சிதறிப்போகும் இன்னோர் முறை போர் ஏற்படும் பட்சத்தில் அணு ஆயுதம் பயன்படுத்தப்படவுள்ளது என்பதை திட்டமிட்டு பெனாசீருக்கு தெரிவிக்காமல் இருந்தார்கள் என்பதுதான் வியப்பிற்குரியது ஜூலை முதல்வாரத்தில் கால்ப் ரெய்த்தும் ஸீகலையும்பெனாசீர்சந்தித்தசில நாட்களில் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஒக்லி, பாகிஸ்தான் அணுகுண்டு.வெடிக்கும் கருவி வைத்திருந்தால் அமெரிக்க சட்டப்படி நிதியுதவி

டாந்தர உத்தரவாதம் தரவேண்டும் ஆப்கானில் போர் நடந்து கொண்டிருந்த போது ரீகனும்புஷ்ஷும் இந்த யோசனையை மீறினர். ஆப்கான் போர் தொடர்ந்து நடப்பதாலும் அணு ஆயுதம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் இல்லாமையினாலும் பாகிஸ்தானிடம் அணுகுண்டு வெடிக்க வைக்கும் கருவி இருக்க வேண்டும் என காரணம் கூறப்பட்டது.

### அமெரிக்கா எச்சரிக்கை

1990 பிறந்தது- ஆப்கான் போர் முடிவடைந்தது இதன் பின் அமெரிக்கத் திட்டத்தில் பாகிஸ்தானுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. சோவியத் சிதைந்ததும் இந்தியாவுடன் நல்லுறவு ஏற்படும் நிலை அமெரிக்காவிற்கு ஏற்பட்டது- எனவே பாகிஸ்தான் அணுகுண்டு வெடிக்கும் கருவியைக் கைவிட வேண்டும் இல்லையென்றால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்ற போக்கில் பாகிஸ்தானிடம் அமெரிக்கா நடந்து கொள்ளத் தொடங்கியது-

1990 ஆகஸ்ட் 6இல் சதாம் குசேயின் குவைத்தை ஆக்கிரமித்தபோது உலகின் கவனம் அங்கு திரும்பியது- பாகிஸ்தான் ஜனாதிபதி இஷாக் கான் தொலைக்காட்சியில் தோன்றி பெனாசிரின் அரசைக் கலைப்பதாக அறிவித்தார்- பெனாசிர் அரசு ஊழல் மிக்கது- திறமையற்றது என அவர் விளக்கினார்- தொடர்ந்து பெனாசீரின் வீட்டைச் சுற்றிலும் டாங்கிகளை நிறுத்தி பாகிஸ்தான் படைகள

இந்திய துணைக்கண்டம் கடந்த சில ஆண்டுகளில் அணு ஆயுதப்போரின் விளிம்பிலிருந்தது என புதிய தகவல்களை தாங்கி 'கிரிட்டிகல் மாஸ்' என்ற நூல் சைமன் அண்ட் ஹஸ்டர் லிமிட்டெட் பதிப்

யிலும் சிறுபான்மையினராக பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தின் கீழேயே இருக்க வேண்டும்! இருக்க முடியும். அவ்வாறு இல்லாத இடத்து பெரும்பான்மையினர் யுத்தத்தின் மூலம் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதே அவரது இக்கூற்றின் வெளிப்பாடாகும்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா போன்றவர்கள் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவதும், அரசாங்கம் அதற்கு தயாராக இருப்பதைக் கூறிக் கொள்வதும், வெறும் ஏமாற்றுத்தனமானதும், போலியானதுமாகும். அதோடு, நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியின் நிலைப்பாட்டை மீறியதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அறிவிப்புக்கள் எவ்வளவு தூரம் செல்லமுடியும்.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீது அவர்கள் விரும்பாமலேயே யுத்தம் திணிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. ஆனால், இவ்யுத்தம் இன்று மட்டுந்தான் திணிக்கப்பட்டுள்ளது என்பதல்ல. தனி சிங்கள மொழி, மசோதா கொண்டு வரப்பட்ட காலத்தில் இருந்து போராட்டம் திணிக்கப்பட்டது என்பதே நிஜம்.

ஆனால், தமிழரின் ஆரம்பப் போராட்டங்கள் சாத்வீகப் போராட்டங்களாக இருந்த போதும் அதனை சிங்களப் பேரினவாத அரசு இராணுவத்தின் இரும்புக்கரம் கொண்டே நசுக்கியது. தமிழரின் உரிமைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

இந்நிலையில் தான் தமிழருக்கு ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஆகியது. சிங்கள பேரினவாத அரசாங்கம் தமிழ் இனத்தை அழித்து விடக் கங்கணங்கட்டிக் கொண்டு இறங்கியபோதே ஆயுதப் போராட்டம் இன்றி தமிழ் இனம் பாதுகாக்கப்பட முடியாது என்ற நிலையில் ஆயுதப் போராட்டம் உருவானது. பல்வேறு நெருக்கடியின் மத்தியிலும் இவ் ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சியே அதன் தேவையை தர்க்கபூர்வமாக வெளிக்காட்டி நின்றது.

அதாவது தமிழர்கள் மீது ஆயுதப் போராட்டம் திணிக்கப்பட்டது: தமிழர் தவிர்க்க முடியாது, போராட வேண்டி வந்தது: இதற்கு விடுதலைப்புலிகள் தலைமை கொடுத்தார்கள். தமிழ் இனத்திற்கென ஒரு பாதுகாப்புக் கவசத்தைக் கொடுக்க முனைந்தார்கள். ஆனால் பல தோல்விகளைச் சந்தித்த பின்னும் கூட சிங்கள பேரினவாதம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. தமிழ் இனத்தின் தேசியத்துவத்தை அழித்து விடவே கங்கணங்கட்டி நிற்கின்றது.

இந்நிலையில் தமிழ் மக்களும் தெட்டத் தெளிவானதொரு முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் இன்று மேலும் அதிகரித்துள்ளது. அதாவது போராட்டத்தைத் தவிர இலங்கையில் தமிழருக்கு வாழ்வில்லை என்ற நிலை தெளிவாகவே உருவாகியுள்ளது. போராடாது தவிர்த்தல் என்பது தமிழர் தேசிய இனம் தன்னைத்தானே அழித்துக் கொள்வதற்கு ஒப்பானதாகவே அமையும். சிங்களப் பேரினவாதம் என்ன விலை கொடுத்தும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டுள்ள வேளையில் தமது பாதுகாப்பிற்காகவும் உரிமைகளுக்காகவும் தமிழர் போராடவேண்டியது தவிர்க்கமுடியாதவாறு நிர்ப்பந்தமாகிவிட்டது: அவ்வாறு போராடாது விட்டால் இலங்கையில் தமிழருக்கு வாழ்வில்லை.

---

பாகிஸ்தான் அமெரிக்காவினால் கைவிடப்பட்டு விட்டதால் பயந்து விட்டது.

## ஏழ்மையான, ஆபத்தான நாடுகள்

இந்தியாவும் பாகிஸ்தானும் எவ்வாறு இரு சந்தர்ப்பங்களில் அணு ஆயுதப் போர் எல்லைக்கு வந்து விட்டிருந்தன என்ற பயங்கர விபரங்களை ஆதாரபூர்வமாக விரிவாக விளக்கும் 'கிரிட்டிகல் மாஸ்' என்ற நூல் ஒன்று வெளியாகியுள்ளது- உலகின் மிக ஏழ்மையான நாடுகள் ஆனால் இவை உலகத்தின் மிக ஆபத்தான நாடுகள் என இந்தியாவையும், பாகிஸ்தானையும் குறிப்பிடுகின்றனர் இந்நூல் ஆசிரியர்களான பேராசிரியர் வில்லியம் பிபர்ரோஸ்சும், ரொபர்ட் வின்ரெம்மும்-

துணைக் கண்டத்தில் அண்மைக் காலத்தில் இரு நாடுகளையும் யுத்தத்தின் விளிம்பிற்கு இழுத்த ஒபரேஷன் பிராஸ்டாக்ஸ், 1990இல் காஷ்மீரில் பதற்றம் அதிகரித்ததால் அணு ஆயுதப் போர் தொடுப்போம் எனும் மிரட்டல், அதற்குப் பதிலாக பாகிஸ்தானின் கஹுடாவில் உள்ள அணுகுண்டு இருப்பிடத்தை இந்தியா தாக்கப் போவதாக வதந்தி, எல்லோரும் அறிந்திருக்கும் இவ்விடயங்களுக்குப் பின்னால் இருப்பது சதியும் சூதும் நிறைந்த உலகம்- இதுவரை வெளியில் வராத பல விடயங்கள் இந்நூலின் மூலம் புதிய அர்த்தங்களையும் பெறுகின்றது- 1984 இல் ஒக்டோபர் 21ஆம் திகதி (இந்திரா கொல்லப்பட 10 தினங்கள் முன்) இந்தியா பாகிஸ்தானின் அணு உலை பகுதியான கஹுடாவைத் தாக்க முடிவெடுத்திருந்தது உண்மை என்கின்றனர் இந்நூலாசிரியர்கள் இதற்கு ஒரு வாரத்தின் பின் இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டதைப் பார்த்தால் கொலைச் சூழ்ச்சிக்குப் புதிய அர்த்தம் ஒன்று ஏற்படுகிறது. பின்பு குலாம் இஷாக்கான் தனது இராஜினாமாவின் பின் செய்தியாளர்களிடையே பேசியபோதுதான், தான் பாகிஸ்தானைக் காப்பாற்றியதாகக் கூறினார்- இந்திராவின் மரணம் அத்தாக்குதலைத் தவிர்த்ததாகக் கூறினார்- இக்கூற்றை இந்திராவின் கொலையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்-

ஸீகலும், காஸ்ப் ரெய்த்தும் அங்கு வந்திருந்தனர்-

பாகிஸ்தான் அணு ஆயுதம் வைத்திருப்பதை சி-ஐ-ஏ- உறுதிப்படுத்தியிருப்பதாக அவர்கள் பெனாசீரிடம் கூறினர்- பாகிஸ்தானிய விஞ்ஞானிகள் யூரேனிய வாயுவை 275 இறாத்தல் நிறைகொண்ட குண்டுகளுக்கான யூரேனிய உலோகமாக மாற்றி வெற்றி கண்டிருப்பதை சி-ஐ-ஏ- அறிந்து கொண்டுள்ளதாகவும் அணுகுண்டை முழுமையாகச் செய்து முடிக்கப் பாகிஸ்தானுக்கு மூன்று மணி நேரம் போதும் எனவும் இந்திய விமானப் படையின் பார்வைக்கு கிட்டாத பலுசிஸ்தான் பாலைவனத்தில் சாகல் என்ற விமானத் தளத்தில் இக்குண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாகவும் இரு அமெரிக்கர்களும் கூறினர்-

இத்தகவல்களினால் அதிர்ந்து போய் இருந்த பெனாசிரிடம் இரு அமெரிக்கர்களும் மேலும் பேசினர்- ஆறிலிருந்து எட்டு குண்டுகள் வரையில் தயாரிக்கும் அளவுக்கு உலோகம் இருப்பதாக அதாவது ஹிரோசிமாவை அழித்த அளவு வலிமை கொண்ட உலோகம் உள்ளதாக இவர்கள் கூறினர்.

## புதுடில்லியை அழிக்க போதுமான அணுகுண்டு

பம்பாய் புறநகர்ப் பகுதியில் உள்ள பாபா அணுசக்தி ஆய்வு மையத்தையோ அல்லது புதுடில்லியையோ அழிக்க இந்த அளவு போதுமானது- ஒரு சதுர மைலுக்கு 9,00,000 வீதம் மக்கள் குடியிருக்கும் தெற்காசிய நகரங்களில் குண்டு வீழ்ந்தால் விளைவு பயங்கரமாகவே இருக்கும்- இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பயங்கர மோதல் வெடிக்கும் சாத்தியக்கூறுகள் சி-ஐ-ஏயை பல வாரங்களுக்குச் சுறுசுறுப்பாக வைத்தது- இதறகான சமிக்ஞைகள் பல செயற்கைக் கோள் கேந்திரங்களில் இருந்து கிடைத்ததே இதற்குக் காரணம்- அணு ஆயுதத் தடையை மீறியது மட்டுமல்லாது பாகிஸ்தான் குண்டுகளை ஏவத் தயாரான நிலையில் வைத்திருப்பது தெரிந்தது-

தாங்க 'கிரிட்டிகல் மாஸ்' என்ற நூல் சைமன் அண்ட் ஹுஸ்டர் லிமிட்டெட் பதிப்பாளர்களினால் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

புதிய நண்பனான அமெரிக்கா அவ்வப்போது பொது மேடைகளில் பாகிஸ்தானின் அணுஆயுத திட்டத்தைபற்றி முணுமுணுக்கும்- ஆனால்ரீகன் உறுதி அளித்ததற்கு அமைய அதில் அமெரிக்கா தீவிரமாக தலையிடுவதில்லை.

அடுத்த பத்து ஆண்டுகளில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானை மொஸ்கோவின்வியட்நாமாக மாற்ற பாகிஸ்தானை பயன்படுத்திக்கொள்ளும். இதற்காக பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதை கண்டும் காணாததைப்போல இருக்கும்.

## அணுகுண்டை உருவாக்க திடசங்கற்பம்

பெனாசிருக்கு தன்னுடைய ராணுவ ஜெனரல் மிர்ஜா அசிம்பேக் பாகிஸ்தானின் அணுஆயுத திட்டத்தை வெகு தீவிரமாக ஆதரிப்பவர் என்பதும், ஈரானிற்கு அணுஆயுத தொழில் நுட்பத்தை பணத்திற்காக அளிக்கும் யோசனை கொண்டவர் என்பதும் நன்கு தெரியும். ஒரு மாதத்திற்கு முன்புதான் ஈரானிய ஜனாதிபதி தன்னுடைய அலுவலகத்தில் இப்படியான கருத்தை கூறிய போது பெனாசீர் அதற்கு மறுத்துவிட்டார். ஆனால் உடனடியாக இஸ்லாமிய குண்டை கொடுக்கும் நிலையில் பாகிஸ்தான் இருந்தது பெனாசீருக்கு தெரியாது.

பெனாசீரின் எதிரியாக பாக்-ஜனாதிபதி குலாம் இஷாக்கான் விளங்கினார்: பாகிஸ்தானின் அணுகுண்டுத் திட்டத்தை 13 வருடங்களாக ஏதாவது ஒரு பதவியில் இருந்து கொண்டு செயல் படுத்தி வந்தவர்தான் இஷாக்கான் ஷியா அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த போது அணுகுண்டு திட்டத்திற்கு நிதி கிடைக்குமாறு பார்த்துக் கொண்டவரும் இந்த இஷாக்கான்.

தன் நாடு அணுகுண்டு வைத்திருக்கின்றது என்பது வெட்டப்படும் என பெனாசீருக்கு தெரிவித்தார்.

## பெனாசீரையும் ஏமாற்றினர்

பாகிஸ்தான் இராணுவம் அணுஆயுத வல்லமையை அடையும் அறிகுறி இருப்பதை அமெரிக்கா அறிந்துள்ளது என்பதை ஒக்லி பிரதமர் பெனாசீருக்கு கூறினார். ஆனால் அமெரிக்காவிற்கு இதை நிரூபிக்க சரியான ஆதாரம் கிடைக்கவில்லை. பாகிஸ்தான் தளபதிகளோ அப்படி எதுவும் இல்லை என பெனாசீரிடம் திரித்து கூறிவிட்டனர். எனினும் ஜூலை மாதமளவில் பாகிஸ்தான் ஜெனரல்களும் விஞ்ஞானிகளும் வரையறையை மீறி விட்டதாக சி ஐ. ஏக்கு அசைக்க முடியாத ஆதாரம் கிடைத்துள்ளதாக ஒக்லி பெனாசீரிடம் தெரிவித்தார்.

ஆப்கான் போர் நடந்து கொண்டிருந்தபோது அணு ஆயுத வடிவமைப்பை மெருகேற்றக்கூடிய அதிநவீன கம்பியூட்டர்கள் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வது சரிதானா என்று தீவிரமாக பரிசீலனை செய்யாமல் அனுப்பப்பட்டது. இந்தத் தொகை இதே மாதிரி திட்டத்திற்கு ஈராக்கிற்கு அப்போது ஏற்றுமதி செய்ததையும் விட அதிகமானது. வழங்கப்பட்ட பல மில்லியன் டொலர் பாகிஸ்தானிய அணுஆயுத திட்டத்திற்கு என திருப்பி விடப்பட்டு விட்டது என்று அமெரிக்க அரசு விசாரணைக்குழுவினர் நம்பினர். அணுகுண்டுக்கு உதவும் உலோகத்தை மீண்டும் வாயுவாக மாற்றாவிட்டால் ஒக்டோபர்முதல் சகல இராணுவ தளபாட விற்பனையும் நிதி உதவியும் நிறுத்தப்படும் என இப்போது பெனாசீரை எச்சரித்தார் ஒக்லி.

1984 வருட வெளிநாட்டு நிதி உதவி சட்டத்தின் படி நிதி ஒதுக்கீட்டை அங்கீகரிக்க முன் பாகிஸ்தானிடம் அணுகுண்டு இல்லைஎன அமெரிக்க ஜனாதிபதி காங்கிரசிற்கு வரு

...நது பெனாசீர் ...டிச் சுற்றிலும் டாங்கிகளை நிறுத்தி பாகிஸ்தான் படைத்தளபதிகளும் இந்த விடயத்தில் தமது ஆதரவை வெளிப்படுத்தினர்- இஷாக்கான் தரப்பில் என்ன காரணங்கள் கூறப்பட்டதாயினும் இது அணுஆயுதக் கைபற்றல் என்றே பெனாசீரும் அவரின் ஆதரவாளர்களும் கூறினர்-

அரசியல் தகராறுகளால் பாகிஸ்தானில் புதிய அரசு அமைவது தடைப்பட்டது- இதனால் ஒரு சிறுஅளவு யூரேனியம் கூட மீண்டும் வாயுவாக மாற்றப்படவில்லை- இதனால் அமெரிக்கா பாகிஸ்தானுக்கான தனது உதவியைத் துண்டித்துக் கொண்டது- இச்சமயத்தில் பாகிஸ்தானிடம் ஏழு அணுக்குண்டுகள் தயாராக இருந்தது- மூன்றாம் உலக நாடுகளில் அணுசக்தி ஆயுத வளர்ச்சியைத் தடுக்க மேற்குலகம் முயன்று தோற்றதைத்தான் இந்தக் குண்டுகள் வெளிக்காட்டின-

அணு ஆயுத தயாரிப்பைப் பொறுத்தவரையில் பாகிஸ்தானைப்போல் மிகக் குறைந்த செலவில் அதிக ஆயுதங்கள் செய்த நாடு வேறு எதுவுமில்லை- 1992 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களில் மனித மேம்பாட்டு பட்டியலில் உள்ள 160 நாடுகளில் 120 ஆவது இடத்தில் பாகிஸ்தான் உள்ளது சனத்தொகையில் 30 சதவீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர். 1000 குழந்தைகளில் 158பேர் சுகாதார வசதியின்றி வாழ்கின்றனர்- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் வருடாந்தம் சுமார் 10 லட்சம்பேர் சத்துணவு இன்மை, நோய் என்பவற்றால் இறக்கின்றனர் மருத்துவ வசதி, குடிநீர் வசதியின்றி 55 மில்லியன் பேர் உள்ளனர். மொத்த வருமானத்தில் 2.6 சதவீதம் கல்விக்கும், 6.7 சதவீதம் ராணுவத்திற்கும் செலவாகிறது- ஆசிரியர்களை விட பாகிஸ்தானில் இராணுவ சிப்பாய்கள் 50 சதவீதம் அதிகம்-

(தொடரும்)

சிறிலங்கா கடற்படையினால்

# இந்திய மீனவர் தாக்கப்படுவதற்கு இராஜ்யசபாவில் கண்டனம்

(டில்லி)

இந்திய மீனவர்கள் மீண்டும் மீண்டும் சிறிலங்கா கடற்படையால் தாக்கப்படுவதைத் தடுக்க பிரதமர் நரசிம்மராவ் தலையிட்டு ஒரு தீர்வு காண வேண்டும் என நேற்று இந்திய இராஜ்யசபாவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சபையின் கேள்வி நேரத்தின் பின் அ. தி. மு.க உறுப்பினர் பி. வி. நாராயணன் இப்பிரச்சினையை எழுப்பினார். சிறிலங்கா அரசின் இக்கொடுஞ் செயல்கள் பல ஆண்டுகளாக நடைபெறுகின்றன. உடனடியாக இதற்கு முடிவு கட்ட வேண்டும். இத்தகைய நிகழ்ச்சி குறித்து பிரதமரை சிறிலங்கா அரசிடம் கடுமையான கண்டனம் தெரிவிக்குமாறு ஜெயலலிதா கோரியுள்ளார்.

1974 கச்சதீவு ஒப்பந்தப்படி இந்திய மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க உரிமை இருந்தும் நமது கடல் பகுதியிலேயே அவர்கள் மீன்பிடிக்க முடியாது தடுக்கப்படுகின்றனர். இந்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசு மதித்து நடக்காது நமது மீனவர்களைத்தாக்கி கொல்கிறது. ஆயிரக்கணக்கான படகுகள் சிறிலங்கா கடற்படையால் அழிக்கப்பட்டு விட்டன எனவும் நாராயணன் மேலும் தெரிவித்தார்.

வடக்கு போர் முனைக்கு

# துருப்புக்கள் அனுப்பும் கப்பல் வாடகைக்குப் பெறுவதில் ஊழல்

(கொழும்பு)

வடபகுதி போர்முனைக்கு துருப்புகளையும் தளபாடங்களையும் அனுப்பி வைப்பதற்காக பழமையான கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தும் சில படை அதிகாரிகளின் முயற்சியினால் பாதுகாப்பு மற்றும் அரசியல் வட்டாரங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளதாக ஐலன்ட் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

துருப்புகளை ஏற்றிச்செல்ல தகுந்ததாக கப்பல் இல்லாத நிலையில் இக் கப்பலை கூடுதல் வாடகைக்கு அமர்த்த சில அதிகாரிகள் முயல்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கப்பலுக்கு வாடகையாக நாள் ஒன்றிற்கு 3,96,000 ரூபா செலுத்தப்படவேண்டும். இந்த பெரும் நிதிச் செலவில் கப்பலை வாடகைக்கு அமர்த்த முடியாது என சிலர் வாதிட்டு வருகின்றனர்.

குண்டு வெடிப்பில் பலியாகிய கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ காலத்திலும் இக் கப்பலை வாடகைக்கு எடுக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது. எனினும் இக்கப்பல் உரிமையாளர்கள் சில ஊழல் அதிகாரிகளின் உதவியுடன் மீண்டும் கப்பலை வாடகைக்கு அமர்த்த முயற்சிப்பதாக ஐலன்ட் பத்திரிகை குறிப்பிடுகின்றது.

இக் கப்பலுக்கு நாள் ஒன்றிற்கு 32 தொன் எரிபொருள் தேவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஊழல் அதிகாரிகளின் இந் நடவடிக்கையை அரசு நிறுத்த ஆவன செய்ய வேண்டும் என கடற்படை வட்டாரங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

---

தரை

னார். மேலதிகமாக விமானங்கள் ஏதும் கொள்வனவு செய்யும் திட்டம் இல்லை எனவும் ஓய்வு பெறுபவர்களுக்குப் பதிலாக ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஆட்சேர்ப்பு நடப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய படைகளுடன் விமானப்படையின் கூட்டு நடவடிக்கை பற்றி வினவப்பட்டபோது, முப்படைகளும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. எனினும் சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. உதாரணமாக இராணுவம் எமது விநியோகவேகம் போதாது என்கிறது. நாம் எம்மால் முடிந்தளவிற்கு செயற்படுகின்றோம் என விமானப்

மரம் நடுகை போட்டி முடிவு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், மாணவர்கள், பாடசாலைகளுக்கு இடையிலாக நடாத்தப்படும் மரநடுகைப் போட்டித்திட்டம் ஓராண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இறுதி மதிப்பீடு செய்கையில் பாடசாலைகளுக்கான போட்டியில் மருதனாமடக் கோட்டத்தில் முதலாமிடத்தை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியும், மாணவர்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய மாணவன் செல்வன் த. ராதாகிருஸ்ணனும், இரண்டாம் இடத்தை அச்சுவேலி புனித திரேசாள் வித்தியாலய மாணவி செல்வி ஆ. நாகதர்சினி என்பவரும், மூன்றாம் இடத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில தமிழ் கலவன் பாடசாலை மாணவன் செல்வன். சி. பிரதாபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி தேர்தலில் விஜேதுங்காவை இ. தொ. கா. ஆதரிக்காது

## பொதுத்தேர்தலிலும் தனித்துப் போட்டியிடும்

(கொழும்பு)

அடுத்த பொதுத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனித்தே போட்டியிடலாம் எனக் கருதப்படுகிறது தேவையான ஆதரவு தமக்கு இருப்பதாக தொண்டமான் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம் அடுத்த தேர்தலில் இ. தொ. கா. போட்டியிடுவதை தடுக்கும் முயற்சியில் செல்லசாமி ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சட்டநடவடிக்கைகள் எடுப்பதன் மூலமும் அதனை தாமதப்படுத்துவதன் மூலமும் இ. தொ. கா. தேர்தலில் பங்குபற்றுவதை தடுக்க செல்லசாமி பிரிவு முயற்சித்து வருகிறது.

ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை தொண்டமான் ஆதரிக்கமாட்டார் எனவும் வேறு ஒரு வேட்பாளரையே அவர் ஆதரிப்பார் எனவும் சில வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# காணாமற் போனவர் பட்டியல் கிராமசேவகர் சமர்ப்பிக்க வேண்டும்

## இராணுவத் தளபதி உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் தமது பிரிவில் இருந்து காணாமற் போனவர்களின் பட்டியல்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டுமென கிழக்கு மாகாண இராணுவத் தளபதி லக்கி அல்கம உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தப் பட்டியல் கிடைக்கப் பெற்றதும், இது தொடர்பாக ஒவ்வொரு கிராம சேவையாளர்களையும் அழைத்து விசாரணை நடத்தவுள்ளதாகவும், அதன்மூலம் கிராம சேவையாளர்கள் மக்களுடன் எப்படி நெருங்கிப் பழகுகிறார்கள் என்பதையும் கடமையில் எவ்வளவுக்கு கண்ணும் கருத்துமாக உள்ளனர் என்பதையும் தெரிந்துகொள்ள இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு பகுதி பொலிசாரும் காணாமல் போனவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் சுதந்திரமான தேர்தல் நடக்குமென எதிர்பார்க்கவில்லை

## சுதந்திரக்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண மக்கள் தேர்தலை மிகுந்த அச்சத்துடன் முகம் கொடுக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இவ் அச்சம் வெகுவாக இருப்பதாகவும் எனவே இப்பகுதியில் ஒரு சுதந்திரமான தேர்தலை நடத்துவது என்பது எதிர்பார்க்க முடியாததொன்று என அம்பாறை மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எல். எம். கே. தென்னம்பொருமா தெரிவித்துள்ளார்.

சமாதானமான ஒரு சூழ்நிலையில் அங்கு தேர்தலை நடத்த கூடிய சூழ்நிலை இல்லையென்றும், பயம், அச்சம் பீதி என்பன இடையே இத் தேர்தல் நடத்தப்படுவதாகவும், தேர்தல் பிரசாரம் கூட ஓரளவு மட்டுமே மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம், தமிழ் மக்கள் வாழும் கிராமங்களில் முழுமையான அச்சம் நிலவுவதாகவும் அங்கு பல அச்சுறுத்தல்கள் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். எனவே இப் பகுதியில் ஒரு சுதந்திரமான தேர்தலை நடத்த முடியாது என்றார்.

மக்கள் அரசாங்கத்தின் மீது தற்போது வெறுப்புக் காட்டத்தொடங்கியுள்ளனர்.

கிழக்கு மாகாண தேர்தலில் சுதந்திர கட்சியைத்தவிர ஏனைய சகல கட்சி ஆதரவாளர்களிடமும் ஆயுதம் உள்ளது. அரசாங்கத்திடமும், சென்ற முறை தேர்தலின் போது வழங்கப்பட்ட ஆயுதம் மீளப் பெறப்படாமை, இந்திய இராணுவத்தினரால் வழங்கப்பட்ட ஆயுதம் மீளப் பெறப்படாத நிலையில் கிழக்கு மாகாண தேர்தல்களை நாம் சந்திக்கின்றோம்.

# பத்திரிகைகளுக்கு தகவல் வழங்கும் இராணுவ அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பத்திரிகைகளுக்கு எந்தவித தகவல்களும் கொடுக்க

வும், உத்தரவை மீறுவோர் கடும் தண்டனைக்கு உள்ளாவர் எனவும் இராணுவத்தள

க்கு போர் தொடர்பாக வாராந்தம் நடைபெறும் செய்தியாளர் மாநாட்டை பாது

ஐ. நா. பாதுகாப்புச் சபையில்

# தற்காலிக உறுப்புரிமைபெற சிறிலங்கா முயற்சி

(வாஷிங்டன்)

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 1996 - 1997 ஒரு வருட காலப்பகுதிக்கு பாதுகாப்புச் சபையில் தற்காலிக இடத்தை

போதிலும் இது தொடர்பாக கொரியாவுடன் சிறிலங்கா ராஜீய முயற்சிகள் மூலம் சமரசம் செய்துகொள்ள முனைந்து வருகிறது. சிறிலங்காவின்

மாக இராணுவம் எமது விநியோக வேகம் போதாது என்கிறது. நாம் எம்மால் முடிந்தளவிற்கு செயற்படுகின்றோம் என விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க குறிப்பிட்டார்.

எம்மிடம் விநியோகத்திற்காக 5 அவ்ரோ விமானங்கள், இரு வை-8 விமானங்கள், ஒன்பது வை-12 விமானங்கள் உண்டு. இவற்றில் அனைத்தும் சேவையில் ஈடுபடுவதாகக் கூறமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய விமானப் படையின் நடவடிக்கையில் திருப்தியுள்ளதா எனக் கேட்கப்பட்டபோது திருப்தி வெளியிட்ட விமானப்படைத்தளபதி முன்னேற்றங்கள் செய்யவும் இடமுண்டு என்றார்.

### ஜெயந்த

அழைக்கப்படவில்லை.

கடந்த நவம்பரில் பூநகரி முகாம் புலிகளால் அழிக்கப்பட்டபின்பு சிறிலங்கா இராணுவத்தால் பூநகரிக்கு அனுப்பப்படும் சிங்க ரெஜிமன்டின் ஏழாவது பட்டாலியன் கட்டளை அதிகாரியான லெப். கேணல் கொத்தலாவல இப்பகுதிக்கு தற்போது வரும் சிரேஷ்ட நிலை அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராணுவ பயிற்சிக்கல்லூரியில் இருந்தபோது அங்கு இரு சிறு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டில் கொத்தலாவல கடந்தமாதம் அமெரிக்காவினால் திருப்பியனுப்பப்பட்டார் என்பது தெரிந்ததே.

(கொழும்பு)

பத்திரிகைகளுக்கு எந்தவித தகவல்களும் கொடுக்கக்கூடாது என கடுமையாக எச்சரித்து இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா கடந்த வாரம் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இந்த உத்தரவை மீறுவோரைக் கண்டறிய தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உதவியைப் பெறப்போவதாக

### யாருடன்

ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருப்பதாகவும், ஒருகோடியே எழுபது லட்சம் மக்கள் தொகையில் தமிழ் மக்களில் 12 விகிதமாகும் என்றும் எனவே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்களின் பிரதிநிதிகளுடனே பேச வேண்டும் எனவும் கூறினார்.

### உதவி

லங்கா அரசு நாட்டின் பொருளாதார நிலை தற்போது அபிவிருத்தியடைவதால் இது குறித்து அச்சமடைய தேவையில்லை என்றது. பாரம்பரிய ஏற்றுமதிகள் மூலமாகவும் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களினாலும் பங்குசந்தையில் வெளிநாட்டு முதலீடு குவிவதாலும் நாட்டிற்கு 2000 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நிதிவளம் உள்ளதாக நிதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வும், உத்தரவை மீறுவோர் கடும் தண்டனைக்கு உள்ளாவர் எனவும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இராணுவத் தலைமைப் பீடத்திற்குள் முரண்பாடுகளை தோற்றுவிக்கக்கூடிய தகவல்களை சிலர் பத்திரிகைகளுக்கு வெளியிட்டதையடுத்தே இராணுவத்தளபதியின் இந்த அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் தனது உத்தரவுகளுக்குப்பணிய மறுத்த சிரேஷ்ட அதிகாரி ஒருவருக்கு இராணுவத் தளபதி கவனமாக நடந்து கொள்ளுமாறு கூறும் கடுமையான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு - கிழ

### கப்பற்

சங்கங்கள், தபால் தொலை தொடர்பு ஊழியர் சங்கங்கள், வடமாநில ஆசிரியர் தொழிற் சங்கங்கள், கடற்தொழிலாளர் சங்கங்கள், உள்ளூராட்சி ஊழியர்கள், அரச திணைக்களங்களின் ஊழியர்கள், போக்குவரத்து ஊழியர்கள், முச்சக்கரவண்டிச் சங்கம், சிற்றூர்திகள் சங்கம், சிகை அலங்காரிப்பாளர் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், வர்த்தக ஊழியர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், சிறுகைத் தொழிலாளர்கள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள், பேக்கரி உரிமையாளர் சங்கம், மத குருமார் ஒன்றியம் ஏனைய வெகுஜன அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்துகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

### இஸ்ரேலின்

அனுமதித்தால் 40 மில்லியன் ரூபாவை நாடு மிச்சப்படுத்த முடியும் என கொழும்பு டொக்யாட் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இஸ்ரேலிய படகுகளே நாட்டிற்கும் கடற்படைக்கும் சிறந்தது என கடற்படை அதிகாரி ஒருவர் கூறியதாக ஐலண்ட் பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

க்கு போர் தொடர்பாக வாராந்தம் நடைபெறும் செய்தியாளர் மாநாட்டை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையகம் சில தினங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினராக முகமட் சம்சுதீன்

கல்முனையைச் சேர்ந்த அல்ஹாஜ் அலி உதுமா லெப்பை முகம்மட் சம்சுதீன் பாராளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஜி. டபிள்யூ. ராஜரட்ணம் மரணமடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மேலும்

ஏற்கனவே சம்பவதினம் 3 மீனவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கின என்பது தெரிந்ததே. மேலும் ஒரு மீனவரின் நிலைதெரியவில்லை இச்சம்பவத்தில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### ஒருநாள்

வழங்கப்படுகின்றன. இதுவரையில் லண்டனுக்கு வந்து சேர்ந்தவர்கள் ஒருவாறு தப்பிக்கொள்கின்றனர்.

இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் இருபது இலட்சம்பேர் வேலையற்றிருக்கிறார்கள். இதனைப் போக்கவே வெளிநாட்டார் லண்டனுக்குள் வருவதை தடுக்கும் வகையில் சட்ட திருத்தங்கள் செய்யப்பட்டன.

சிறிலங்காவில் தமிழருக்கு ஏற்பட்டிருக்கின்ற இராணுவ நடவடிக்கைகளில் லண்டன் அரசியல் வாதிகள் அக்கறை எதுவும் எடுக்கிறார்களா என்று கேட்டபோது, அந்த நாட்டிலேயே பெரும் பிரச்சினைகள் இருந்துவருகின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதிலேயே அந்த நாட்டு அரசியல்வாதிகள் அக்கறை செலுத்துகின்றனர். இரண்டு தினங்களுக்கு முன்னர் ஐ.ஆர்.ஏ. லண்டன்மீது தாக்கியது. இதுபோல பல்வேறு பிரச்சினைகள் அவர்களுக்கு உண்டு என்றார். (யோ)

நடத்த முடியாது என்றார்.

மக்கள் அரசாங்கத்தின் மீது தற்போது வெறுப்புக் காட்டத்தொடங்கியுள்ளனர். எமது கட்சிக்கு அரசாங்கக் கட்சி ஆதரவாளர்கள் வெளிப்படையாகவே பல உதவிகளைச் செய்துவருகின்றனர். இவ்வளவு காலமும் எந்த நிவாரணமும் வழங்கப்படாத இப்பகுதிக்கு தேர்தல் பிரசாரமாக நிவாரணம், உதவிகளை வழங்க அரசாங்கம் தொடங்கியுள்ளது என குற்றம் சாட்டினார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 1996 - 1997 ஒரு வருட காலப்பகுதிக்கு பாதுகாப்புச் சபையில் தற்காலிக இடத்தை பெற்றுக் கொள்வதற்காக சிறிலங்கா அரசு முயற்சிகளில் இறங்கியுள்ளது. தென் ஆசிய நாடு ஒன்றிற்கு பாதுகாப்புச் சபையில் இக்காலப்பகுதியின் போது அங்கத்துவம் வழங்க பாதுகாப்புச் சபை முன்வந்துள்ளது.

இந்த இடத்திற்கு தென் ஆசிய நாடல்லாத தென் கொரியா போட்டியிடுகின்ற கொரியாவுடன் சிறிலங்கா ராஜீய முயற்சிகள் மூலம் சமரசம் செய்துகொள்ள முனைந்துவருகிறது. சிறிலங்காவிற்கு இடம்வழங்க சார்க் அமைப்பும் பொதுநலவாய அமைப்பும் ஆதரவு தெரிவிப்பதாக சிறிலங்கா அரச வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் சபையில் 33 வருடங்களுக்கு முன் சிறிலங்கா ஒருவருட அங்கத்துவ நாடாகஇருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழர்கள் என்பதால் கைதுசெய்வது சர்வதேச சட்டத்திற்கு முரணானது

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

கொழும்பில் ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது. இவ்வாறு கைதானவர்கள் பலர் பின் விடுதலை செய்யப்பட்டாலும் விடுதலைப்புலிகளின் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக தமிழர்கள் கைதாவதாகவும், சித்திரவதைக்குள்ளாவதாகவும் மன்னிப்புச்சபையின் இலங்கை குறித்து கடைசியாக வெளியான அறிக்கை கூறுகிறது.

கடந்தஆண்டு பிரேமதாசா கொலை செய்யப்பட்டதையடுத்து பெருமளவில் தமிழர்கள் கைதாகினர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை கொழும்பில் அரசபடைகள் நடத்தும் தேடுதல் குறித்து விபரித்துள்ளது. இக் காரணங்களால் பல தமிழர்கள் இருட்டியதும் வெளியில் நடமாடுவதில்லை எனவும் பல தமிழர்கள் வீடுகளிலும், விடுதிகளிலும் கைது செய்யப்படுவதாகவும் கடந்த ஆண்டு ஜூன் மாதத்தின் பின் 15,000 தமிழர்கள் கொழும்பில் கைதானதாக அரசு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் இவ்வறிக்கைகூறுகிறது.

கைதான பலர் தகுந்த காரணமின்றி தமிழர் என்பதற்காகவே இருப்பதால் இது சர்வதேச சட்டத்தை மீறும் செயலாகும். ஒப்புதல் வாக்குமூலம்பெற சித்திரவதையும் நடக்கிறது. கடந்த ஆண்டு கைதான ஒருவர் கொழும்பு இராணுவ முகாம் ஒன்றில் அடித்து உதைக்கப்பட்டு அவரின் பிறப்புறுப்பு வாளினால் வெட்டப்பட்டது. இவர் இம் மாத ஆரம்பத்தில் விடுவிக்கப்பட்டார்.

அவசரகால சட்டத்தின் கீழ் படைகளுக்கு உள்ள அதிகாரம் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப்படுவதையே இது காட்டுகிறது என அந்த அறிக்கை கூறுகிறது. புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் இருந்து தனது அரசியலமைப்பை காக்கவேண்டிய நிலையில் அரசு உள்ளது எனவும் படைகளின் நடவடிக்கை தமிழர்களை மேலும் அந்நியப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த குற்றச்சாட்டுக்களை சிறிலங்காவின் பிரிட்டிஷ் தூதுவர் ஜெனரல் சிறில் ரணதுங்கா மறுத்துள்ளார்.

## கொழும்பில் தமிழர்கள் கைதுசெய்யப்படுவதில்லை

### சிறில் ரணதுங்கா கூறுகிறார்

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதில்லை ஓரளவு தமிழ்இளைஞர்கள் சொற்ப காலம் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பின்னர் விடுதலை செய்யப்படுகின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக கடற்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி மற்றும் சில சாதாரண பிரஜைகளும் கொலை செய்யப்பட்டனர். கொழும்பில் பெரும் எண்ணிக்கையில் அப்பாவி மக்கள் வாழ்கிறார்கள். ஆனால், இந்த கொலைகளுக்குப் பின்னணியில் இருப்பவர்களை எம்மால் கண்டுகொள்ளமுடியாது ஆகவேகொழும்பில் வாழும் தமிழ் இளைஞர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும், லண்டனிலுள்ள சிறிலங்காவின் உயர் ஸ்தானிகருமான சிறில் ரணதுங்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர்களைத் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்வதில்லை இந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இராணுவ வீரர்கள் துன்புறுத்தலில் ஈடுபட்டால்அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் நான் முன்பு இராணுவத்துக்குப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியுள்ளேன் இவ்வாறான விடயங்கள் குறித்து முறைப்பாடு கிடைத்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 22-2-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 942

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-8600, 24-5912, 26-7627, 26-763, 26-8917, 26-2827, 40-7583, 26-1285, 26-3140, 26-6398, 27-1531, 28-1062, 26-4691, 24-7087, 26-2150, 41-2509, 42-1293, 40-2829, 41-8169, 26-8878.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-5406, 42-3726, 26-7949, 40-7584, 26-9626, 28-8754, 26-767, 26-5202, 43-3576, 26-5782, 41-1092, 42-2945, 24-5041, 26-9797, 27-6415.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 51-ஆம் இலக்கத்திலுள்ள "சமாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.